1374

Recomm... y the Director of Public Instruction Madras for all Schools.

Registered No. M. 1272.

All Rights Reserved.

# கல்ப தரு.

## KALPA THARU.

Vol. V. | SEPTEMBER 1923. | No. 3.

பத்திராசிரியரும் பிரகாசிப்பவரும்.
கே. பி. சேஷாத்திரி அய்யங்கார்.

*Editor & Publisher*
K. P. Seshadri Aiyangar,
94, Coral Merchant St., G. T., Madras.

### கல்பதரு.

ஓர் உயர்ந்த தமிழ் மதாந்தப் பத்திரிகை.

கல்வி இலாகா தலைவராலும், கைத்தொழிலிலாகா தலைவராலும், பள்ளிக்கூட டிபடி இன்ஸ்பெக்டர்களாலும், தாலுக்கா போர்டு பிரிசிடெண்டுகளாலும் கல்வி அறிவு பரவச்செய்வதில் முதன்மை பெற்றதென அங்கீகாரமும் ஆதரவும் பெற்ற சிறந்த பத்திரிகை.

உபாத்தியாயர்களுக்கு இன்றியமையாத நூதன கல்வி முறைகளும் சிறுவர் சிறுமிகளுக்கு நீதிபோதிக்க நல்ல அருமையானகதைகளும் நாவல்பிரியர்களுக்கு நாவலும், சரித்திரம், விவசாயம் கைத்தொழில் செய்யும் முறைகள், வைத்தியம், அனுபவமுறைகள், வினோதக் கூற்றுகள், இன்னிசைப்பாட்டுகள் ஒவ்வொருமாதமும் வெளிவருகின்றது.

உடனே சந்தா சேருங்கள்.

ANNUAL SUBSCRIPTION.
Inland Rs. 3. Foreign Rs. 4-8.
For Govt. Schools, Clubs & Associations.
Royal Edition Rs. 4-0-0.

### சூரிய குமாரி

அல்லது

பெரிய டாலவனத்தின் பரம ரகசியம்.

மிகப்பெரியதும் எடுத்ததுமுத ... உற்சாகத்தையும் ...
...ஸ்யத்தையும் கொடுக்கும் தன்...
... இப்பொழுதே சந்தா...

PRINTED AT THE INTERNATI...

எல்லோர் மனதையும் அதியுத்சாகப்படுத்தும் சுகந்தம்

OTTO DILBAHAR (Registered).

# ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னதவாசனையுடையதும், மனத்திற்கு சந்தோஷமுண்டாக்கக்கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலியசம்மந்தமில்லாது, பொருக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைக்குட்டையில் சில துளிகள்விட புஸ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடிய வாசனையை தரக்கூடியது. விவாஹகாலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற சென்டுகள், அத்தர்களைவிட இந்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில்வருமாரு அளவுபுட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறிய புட்டி 1-க்கு | (½ டிராம்) | விலை ரூ. | 0 | 8 | 0 |
| நடுத்தரம் ,, | (1 டிராம்) | ,, | 0 | 12 | 0 |
| வேறு ,, | (2 டிராம்) | ,, | 1 | 4 | 0 |
| பெரியது ,, | (4 டிராம் அல்லது ½ அவுன்ஸ்) | | 2 | 0 | 0 |
| மாதிரி ,, | | | 0 | 2 | 0 |
| வாசனை கார்டு 1-க்கு | | | 0 | 1 | 0 |

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதேமாதிரி அநேக பேர்கள் இருப்பதால் வாங்கும்பொழுது புட்டிகள்பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று ஜாக்கிரதையுடன் கவனிக்கவும்.

ஸோல் எஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி.,

155, ஜும்மா மஜித் மார்கட், பம்பாய்

Apply t›

Anglo Indian Drug & Chemical Co.,

155, Jumma Musjid Market, Bombay


ஆர்டர் ெ

# உங்களின் விருப்பத்தை தெரியப்படுத்தினீர்களா?

## டிக்டாக்

வால் கிளாக் சரியான மணியை காட்டக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது.

விலை ரூ 3 தான்

## டிக்டாக்

அருமையான ஜெர்மன் கடிகாரம். உடனே வரவழையுங்கள். மிக்க அருமையானது.

விலை ரூ 3 தான்.



# ஆச்சரியம்.

இதை பார்த்தால் ஆஹா! என்ன ஆச்சரியம் என்ன பொம்மைகள் ஆடுவது, வருவது, பார்த்தால்தான் உண்மை விளங்கும். இதன் பெயர்தான் பயாஸ்கோப் நிகரற்ற படம் விற்பனை ஆகிவிட்டது. விலை மிக்க கம்மி

அணா 8, தான்.

# 10-இனாம் சாமான்கள்

உடனே கொடுக்கப்படும் இனிய க்ஷவரக் கத்தி சுகமாக இருக்கும். மிக்க ஆனந்தமாகவும், ரம்மியமாகவும் இருக்கும்.

விலை ரூ 6 தான்

வி. எ. எஸ். பார்ணி, தபால் பெட்டி 17 மதராஸ்.

# உடனே எழுதுங்கள்

# "ஆத்ம சக்தி"

## ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக்கான வியாசங்கள், வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றின் அனுபவங்கள், வேதாந்தம் இதிகாஸ புராணங்களின் நுட்பம், விகடத்திரட்டு, வைத்தியக்குறிப்பு, சிறு கதைகள், அரிய பெரிய நவீனகம் (நாவல்) தேசியகீதங்கள் மாணவர் சிறுமியர்க்கான இன்ப உரைகள் முதலியவை பல அறிஞர்களால் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வெளிவரும் விஷயமனைத்தும் ஆடவர் பெண்பாலர் சிறுவர் அனைவருக்கும் பயன்தரக்கூடியன என்போம்.

பாரத புத்ரர்களும் "ஆத்ம சக்தி" உதயத்தை அன்புடன் எதிர்நோக்கிச் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தாதரிக்கவேண்டுகிறோம்.

வருட சந்தா.

| | | | | |
|---|---|---|---|---|
| உள்ளூருக்கு (புதுவை) | ரூ. | 0 | 12 | 0 |
| வெளியூர்கட்கு | ,, | 1 | 0 | 0 |
| வெளிநாடுகளுக்கு | ,, | 1 | 4 | 0 |

விலாசம்:—

மாதிரிப் பிரதி இனாம்

"ஆத்மசக்தி" கார்யாலயம்,

புதுச்சேரி.

# கிராம பரிபாலனம்.

## இஃது ஒரு சிறந்த சமாசாரப் பத்திரிகை.

மாதம் இருமுறை வெளியிடப்பெறுவது.

கிராம வாசிகள், கிராம அதிகாரிகள், ஆரம்ப ஆசிரியர் இவர்கள் நன்மையை நாடி உழைப்பது இப்பத்திரிகை. தாய் நாட்டின் உயிர்நிலை கிராமங்களாதலின், கிராம அபிவிருத்தியே நாட்டின் முன்னேற்றமாகும். இத்தகைய முன்னேற்றத்தை நாடும் பத்திரிகையை ஆதரிப்பது தமிழர் கடமையாம்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 5—0—0 வெளிநாடு ரூ. 6—0—0

மானேஜர்:—

"கிராம பரிபாலன" ஆபீஸ்,

திருநெல்வேலி

# கற்பகம்.

வருட சந்தா ரூ. 1 0 0 வெளி நாட்டிற்கு ரூ. 1 8 0

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள் நூதன கற்பிதங்கள், மதவிஷயம் சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோ[illegible] முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர்,

கற்பகம் ஆபீஸ், புதுவை.

# ஜீவானந்த போதினி

(ஒரு தமிழ் மாதப் பத்திரிகை.)

வருட சந்தா உள்நாடு ரூபா. ஒன்று. வெளிநாடு ரூபா. 1—4—0

இது தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கென்றே சென்னையினின்று இன்பக் கதைகளையும், சிறந்த கட்டுரைகளையும், நவீனங்களையும், அரிய ஆராய்ச்சிகளையும் தன்னகத் தடக்கிக்கொண்டு வெளிவரும் ஒருயர்ந்த மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை. இதற்கு விஷயதானம் புரிவோர்கள் பெரும்பாலார் சிறந்த தமிழ்ப்புலவர்களும், ஆங்கில விற்பன்னருமே யாவர். தமிழின்கண் ஆர்வ மிக்குடைய மாணவர்கட்கு இது பெரிதும் பயனுடையது. இதனை ஏழைமுதல் எல்லோரும் வாங்குதல்வேண்டி இதன் விலை மிகவும் குறைக்கப்பட்டிருக்கின்றது.

மானேஜர் :—

"ஜீவானந்தபோதினி ஆபீஸ்"

நெ. 1-382, சௌகார்பேட்டை, சென்னை.

---

# லக்ஷ்மி.

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

இது கே. எஸ். முத்தையா அவர்களால் தமிழ் மக்களின் மேன்மையை விரும்பி நடத்தப்படுகிறது. இதில் வினோதமான விஷயங்களும், பல பெரியார்களுடைய திவ்விய சரித்திரங்களும், இன்பந்தரும் பல பாடல்களும், நீதிகளும், விகட விஷயங்களும், வெகு அழகிய படங்களும் வெளிவருகின்றன.

சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டுக்கு வருடம் 1-க்கு | ரூ. | 2 | 0 | 0 |
| வெளிநாட்டுக்கு | ,, | 2 | 8 | 0 |
| உயர்ந்த பதிப்பு (Art Paper) | ரூ. | 10 | 0 | 0 |

"லக்ஷ்மி" ஆபிஸ் தபால்பெட்டி 99, சென்னை.

---

# ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்.

ஒரு ஆங்கில தமிழ் மாதப்பத்திரிகை.

மாட்சிமை தங்கிய சென்னை கவர்னரவர்களின் மனவியான லேடி வில்லிங்டன் அவர்கள் தந்த உருவப்படத்தோடும் சுயலிகிதத்தோடும் ஒவ்வொருமாதமும் பதினைந்தாம் தேதி வெளிவரும்.

பத்திராதிபர்:

டாக்டர் மிஸ்ஸிஸ் அண்ணு தாமஸ்.

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 3—0—0 |
| வெளிநாடுகளுக்கு | ,, | 4—0—0 |

எல்லாவிடங்களிலும் ஏஜெண்ட்டு தேவை.

மானேஜர்,

"ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்"

திருநெ

## லோகோபகாரி.

### அரிய வாரப் பத்திரிகை

நல்ல வாரப்பத்திரிகையை விரும்புகிறீர்களா? சுயராஜ்யத்தை விரும்புகிறீர்களா? கிருத வருகையை அறிய விரும்புகிறீர்களா? பகவான் வருகையை தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா? இன்ப பொழுது போக்கை விரும்புகிறீர்களா? புத்துயிரையும் புதிய ஊக்கத்தையும் விரும்புகிறீர்களா? வேதாந்தம்படிக்க விரும்புகிறீர்களா? உலக விநோதங்களை அறிய விரும்புகிறீர்களா?—அப்படியானால்—லோகோபகாரிக்கு உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.—வருஷ சந்தா ரூ. 4.

லோகோபகாரி ஆபீஸ், சென்னை.

---

## ஜன மித்திரன்.

### சித்திர சகிதமான தமிழ் மாதப்பத்திரிகை.

இதில், சிறந்த வியாசங்கள், கல்வி, விவசாயம், வியாபாரம், கைத்தொழில், இவைகளைக் குறித்த பல விஷயங்கள், தேசாபிமானிகளின் திவ்விய சரித்திரங்கள், சிறுவர்களுக்குமான விஷயங்கள் சிறந்த நீதிகளை போதிக்கும் நாவல்கள் நாடகங்கள் முதலியனவும் வர்த்தமானங்களும், தெளிவான நடையில் வெளிவருகின்றது. பிரதி புதன் தோறும் வெளி வரும் வருஷசந்தா ரூ. 3—0—0 வெளிநாடுகளுக்கு ரூ. 5—0—0.

ஜனமித்திரன் ஆபீஸ் 19, தம்பு செட்டித்தெரு, சென்னை.

---

## ஜன ரஞ்ஜனி

### உயர்தர மதாந்தத் தமிழ் பத்திரிகை.

இதில் இலக்கியம், சித்திரக்கலைகள், ஜீவிய சரித்திரம், தேசசரித்திரம், ஜனசமூகம், மதம், தத்துவம், வைத்தியம், நாவல்கள், சிறுகதைகள், வேடிக்கை விநோதங்கள், ஜன இயல்பு முதலிய பல வியாஸங்கள் வெளி வரும்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 வெளி நாடுளுக்கு ரூ. 3—0—0.

வி. நாராயணன் அண்டு கம்பெனி,
4, கோண்டி செட்டித்தேரு சென்னை.

---

## பைந் த்மிழ்

### சித்திர விளக்கத்துடன் உள்ள
### ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

அரிய தமிழில் நல்ல நடையில் சுவையுடன் பிரபல வித்வான்களால் எழுதப்பட்ட அனேக வியாசங்கள் உள்ளது. தமிழ்நாட்டு ஆண்பெண்களுக்கு அறிவை ஊட்டுவது.

-ந்தா உள்நாடு ரூ. 2—8—0 வெளிநாடு ரூ. 3—12—0

பந்தமிழ் ஆபீஸ்,
ருவல்லிக்கேணி, சென்னை.

# KALPATHARU

## A High Class Illustrated Tamil Monthly

கல்பதரு

*Editor :* K. P. SESHADRI AIYANGAR

Annual Subscription: Inland Rs. 3, Foreign Rs. 4/8.
For Govt. Schools Rs. 4.

## Special Features

"KALPATHARU," is a high class illustrated Tamil monthly magazine, highly instructive, comprising in its scope, estimable articles on **literature, history, agriculture, commerce and industry, sanitation co-operation** and **education.** Its value as a serviceable journal need not be specially mentioned when it is pointed out that it is run on approved lines and numbers among its contributors well known writers. It is made attractive to women and children by the introduction **of short** and **moral stories** and **domestic hints.**

Added to this—this journal has the approval of the Director of Public Instruction, who has declared the advisibility of the use of this magazine in all schools of boys, girls and training schools for masters and mistresses.

It is welcomed with delight in many an Indian home, Farmstead, School, Library, and Club. It is *an excellent medium for advertisement.* Everything advertised in our columns is sure of attracting almost the whole of the Tamil knowing public. Our charges are simply nominal. The following are the rates of advertisement:—

One full page Rs. 10. Half page Rs. 5. Quarter page Rs: 3.
Special short advertisements a novel procedure.

*Please apply to-day for concession Rates.*

## The Kalpatharu Office,

**94, Coral Merchant Street, G. T., Madras.**

# கல்பதரு

## ஓர் அரிய சித்திர சகிதமான மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

பிரதி வருஷமும் ஜுலை மாதம் முதல் ஆரம்பிக்கின்றது. இவ்வரிய மாதப் பத்திரிகையில் விசேஷ வியாசங்களும், ஆரோக்கிய விமர்சனங்களும், விவசாயம் கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, கல்வி, தொடரும் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், விநோதக் கூற்றுகள், சமாசாரக் குறிப்புகள் ஆகிய இவைகள் தகுந்த பண்டிதரைக்கொண்டு எழுதப்பட்டு வெளிவருகின்றன. ஒவ்வொரு மாதமும் அழகிய சித்திரப் படத்துடன் வெளிவருகின்றது. உபாத்தியாயர்களுக்கு அவசியமான பல அரிய விஷயங்கள் வெளிவருகின்றன.

### தபால்கூலியுள்பட சந்தா விபரம்.

| | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | 3 | 0 | 0 | 4 | 8 | 0 |
| தனிப்பிரதி | 0 | 5 | 0 | 0 | 6 | 0 |
| கவர்மென்ட் பள்ளிக்கூடங்களுக்கு | | | | 4 | 0 | 0 |

சந்தா தொகையை முன்பணமாகத்தான் அனுப்பவேண்டும். அல்லது முதல் சஞ்சிகையை ஒரு வருஷத்திற்கு அல்லது ஆறுமாத சந்தாவிற்கு வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரிகையின் சந்தாதார்களுக்கு மாத்திரந்தான் கல்பதரு பிரசுரங்கள் குறைந்த விலைக்கு கொடுக்கப்படும். வியாசங்கள் எல்லாம் தொடர்ந்து வருகின்றதால் ஜுலைமாதம் முதற்கொண்டே சந்தாதார்கள் சந்தாதொகையைச் செலுத்தி கல்பதருவை பெற்று பயன்பெறுவது உத்தமம்.

ஜனவரிமீ 31உக்குள் சந்தாபணம் அனுப்புவோருக்

நாவல் இனும்.

# கல்பதரு பிரசுரங்கள்.

**1. இராஜமணி** அணா 12

ஓர் அரிய துப்பறியும் நாவல். கற்பின் சிறப்பும் காதலின் உயர்வும், நேசத்தின் வன்மையும், நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமிகள் படிக்க ஏற்றது.

**2. நளினாக்ஷி** அணா 5

ஓர் இனிய ஜனாசாரக்கதை. கிழவர்களுக்குச் சிறு பெண்களை இளையாளாகக் கொடுப்பதனா லுண்டாகும் கெடுதிகளைப் பற்றியும், பதிவிரதையின் கடமைகளும் இதில் விவரமாய் எழுதப்பட்டுள்ளன. இனிய செய்யுள்களும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொருவரும் இதைப்படித்து ஆனந்தங்கொள்ளவேண்டும்.

**3. ஸரோஜா** அணா 5

ஒரு ஜனாசாரக் கதை, ஆசாரம், ஒழுக்கம், இந்துப்பெண்களின் லக்ஷணம், சதா நாயகி தான் காதலித்த நாயகனையே அடைவதும், அவன் புறக்கணிப்பதும் கடைசியில் மணங்கொள்வதும் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும்.

**4. நந்தன்** அணா 5

சிறந்தசிவபக்தனின் இனிய சரித்திரம் இனியபாடல்கள் கொண்டது. நடராஜ பெருமானது படம் அடங்கியது.

**5. ராணா அமீர்சிங்** அணா 3

ஒரு, ராஜபுத்திரவீரனின் உண்மை சரித்திரம். அவனது அழகிய உருவப் படமுங்கொண்டது. சிறுவர் சிறுமிகள் அவசியம் படிக்கவேண்டியது.

**6. உமாதேவி, ஹைமவதி.** அணா 6

தாட்சாயணியின் விவாகமும், பார்வதியின் திருமணமும்! இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன. மூன்று சித்திரப் படங்கள் அடங்கியுள்ளன.

**...சிங்கன்** அணா 6.

## ஸ்ரீ விவேகாநந்தரது

### வேதாந்த புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானயோக ரஹஸ்யம் | 2 | 4 |
| சச்சிதானந்த சிவம் | 1 | 2 |
| ஞானரத்தினவளி | 1 | 8 |
| விவேகா நந்தரின் கடிதங்கள் | 0 | 8 |
| எனது குருநாதர் | 0 | 8 |
| வேதாந்த தத்துவம் | 0 | 8 |
| வேதாந்த நந்தரின் அருள் மொழிகள் | 2 | 0 |
| கர்மயோகம் | 1 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சம்பாஷணை | 2 | 4 |
| வேதாந்த ரகஸ்யம் | 1 | 8 |

### தேசிய புத்தகங்கள்.

| | | |
|---|---|---|
| இந்தியாவும் சுய ஆட்சியும் | 1 | 8 |
| மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும் | 0 | 8 |
| என் கடன் பணிசெய்து கிடைப்பதே | 0 | 8 |
| தேசபக்தாமிர்தம் | 1 | 0 |
| பாரதநாட்டின் நிலைமை | 1 | 0 |

### சிறந்த தமிழ் நாவல்கள்.

| | | |
|---|---|---|
| சண்முகசுந்தரம் ... ... | 2 | 0 |
| தனபாக்கியம் ... ... | 2 | 0 |
| பாலாமணி ... ... | 2 | 0 |
| விக்கிரம சிங்கன் கோட்டைமர்மம் | 1 | 0 |
| கனகாம்புஜம் ... ... | 0 | 8 |
| ஜகதீசன் ... ... | 1 | 4 |
| கோகிலம்பாள் ... ... | 0 | 12 |
| ஞானம்பாள் ... ... | 0 | 12 |
| உத்தியோகம் ... ... | 0 | 6 |
| ஆனந்தவல்லி ... ... | 0 | 6 |
| மேனஹா 2-பாகம் ... ... | 3 | 0 |
| உமார் பாட்சா ... ... | 2 | 8 |

## நூதன தமிழ் நாவல்களும், கதை புத்தகங்களும்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதனகல்யாணி | | | மிருச்சகடி | 1 | 8 | கமலரேகை | 0 | 12 |
| 1, 2, 3, பாகம் | 4 | 8 | தலையணை மந்திரம் | 0 | 10 | கற்பகவல்லி | 0 | 12 |
| ஆனந்தசுந்தரி | 0 | 12 | பொற்றொடி | 1 | 4 | காதலி | 0 | 12 |
| சுந்தரன் | 0 | 12 | நாகரீகம் | 2 | 0 | கயற்கண்ணி | 0 | 12 |
| சுகந்தமாலினி | 0 | 6 | தனபாலன் | 2 | 0 | சுந்தரன் | 0 | 12 |
| பரிமளரோஜா | 0 | 6 | கனகாங்கி | 3 | 0 | தங்கம்மாள் | 0 | 12 |
| அங்கையற்கண்ணி | 1 | 12 | தனபாக்யம் | 2 | 0 | தாமோதரன் | 0 | 12 |
| காதலா? கருணையா | 0 | 14 | வீரகேசரி | 1 | 12 | ஆனந்தமடம் | 1 | 0 |
| ஷண்முகசுந்தரம் | 2 | 0 | தேவலோககேஸ் | 1 | 8 | ஞானாம்பாள் | 0 | 12 |
| விக்ரமசிங்கன் | | | சுத்தரிமனோகரன் | 1 | 8 | மீனாக்ஷிசுந்தரன் | 0 | 12 |
| கோட்டை | 1 | 0 | சித்திரரேகை | 1 | 8 | வானநிதி | 0 | 12 |
| பாலாமணி | 2 | 0 | கனகமாலை | 1 | 4 | பூமாது | 0 | 12 |
| மேனகா I & II | | | தாமரைவதனி | 1 | 4 | லீலாவதி | 0 | 12 |
| கனகாம்புஜம் | | | ஜெகதீசன் | 1 | 0 | ஞானசுந்தரம் | 0 | 12 |
| I & II | 2 | 8 | ஞான சம்பந்தன் | 1 | 4 | குணசீலன் | 0 | 10 |
| வசந்தமல்லிகா | 1 | 8 | பத்மரேகை | 1 | 4 | சத்யசீலன் | 0 | 12 |
| வசந்தகோகிலம் | 0 | 12 | மாணிக்கவல்லி | 1 | 4 | நாகரத்னம் | 0 | 12 |
| மங்கையர்பகட்டு | 0 | 12 | அமிர்தவல்லி | 1 | 0 | புஷ்பாவதி | 0 | 10 |
| ராஜேந்திரமோகனா | 0 | 12 | பன்னீர்செல்வம் | 1 | 0 | லீலாவதி சுலோசனா | 0 | 12 |
| யாயசுந்தரி | 0 | 12 | மனோகரி | 1 | 0 | சற்குணசந்திரன் | 0 | 12 |
| கமலாக்ஷி | 1 | 12 | குணசுந்தரம் | 1 | 0 | 12 நீதிக்கதைகள் | 0 | 10 |
| ஞானாம்பிகை | 1 | 8 | கமலாஸனி | 1 | 0 | கண்ணம்மாள் | 0 | 8 |
| ஞானசம்பந்தம் | 1 | 4 | அன்பானந்தை | 1 | 0 | மனோகரன் | 0 | 8 |
| ஞானப்பிரகாசம் | 1 | 8 | சந்திரசேகரி | 1 | 0 | கண்டிராஜன் | 0 | 8 |
| சிவஞானம் | 1 | 4 | கிராமவாழ்க்கை | 1 | 0 | காமாக்ஷி | 0 | 12 |
| சந்திரகாந்தா | 0 | 12 | பரிமளா | 1 | 4 | கிருபாம்பாள் | 0 | 8 |
| மோகனசுந்தரம் | 0 | 12 | பத்மாவதி | 2 | 0 | கள்வர் தலைவன் | 0 | 12 |
| ஆனந்தகிருஷ்ணன் | 0 | 12 | சின்மயசிகாமணி | 1 | 12 | கோமளம் காஞ்சி | | |
| திக்கற்ற இரு குழந் | | | வீரவல்லி | 0 | 12 | யாத்திரை | 0 | 8 |
| தைகள் | 1 | 8 | சாரஸநேத்திரி | 0 | 12 | திடீர்புளுகன் | 0 | 6 |
| பெண்மணி | 0 | 12 | கனகவல்லி | 0 | 12 | பூவையர்பூஷணம் | 0 | 8 |
| கன்னிமுத்தம் | 5 | 0 | ஜீஜாபாய் | 1 | 4 | வித்தியாநந்தர் | 1 | 4 |

## ஸ்ரீ ரங்கா அண்டு கம்பெனி,

ஸ்ரீமத் வால்மீகராமாயண தமிழ் வசனகாவியம். ஸம்ஸ்கிருதத்தை அனுசரித்த மொழிபெயர்ப்பு. ஸ்திரீகளும் பாலர்களும்கூட வாசித்தறிந்து கொள்ளும்படி எளியநடையில் எழுதப்பட்டிருக்கிறது. சுலோகங்களின் நம்பர்கள் பாராக்களின் முதலில் எழுதப்பட்டிருக்கின்றன.

**1**-வது வாலியம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டமும் விலை ரூபா **6-0-0**.

**2**-வது வாலியம் சுந்தர காண்டம், யுத்த காண்டம்; உத்தரகாண்டமும் விலை ரூபா **6-0-0**.

ஏழு காண்டமும் ரூ. **12**-தான்.

அதேமாதரியாக வியாச மஹாபாரத வசனம்.

ஆதிபர்வம் **2-8-0**, சபா பர்வம் **1-8-0**, ஆரண்ய பர்வம் **5-0-0**, விராட பர்வம் **2-0-0**, உத்யோக பர்வம் **4-0-0**.

ஸ்ரீமத் பாகவதம் கிரந்த ஸ்லோகம், ஸ்ரீதரிவியாக்யானம் தமிழ் அர்த்தத்துடன் கூடியது.

**1—4** ஸ்கந்தம் ஒரு பயிண்டாக **6-0-0**. **5—9** ஸ்கந்தங்கள் **6-0-0**. **10**-வது (தசமஸ்கந்தம்) **6-0-0**. **11—12** ஸ்கந்தங்கள் **4-0-0**.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கம்பராமாயணம் செய்யுள் உரையும் .... | 6 | 0 | 0 |
| ஆனந்தராமாயணம் .... | 5 | 0 | 0 |
| தத்வஸங்கிரஹ ராமாயணம் .... | 3 | 8 | 0 |
| தாயுமான சுவாமிகள் பாட்டு உரையுடன் .... | 4 | 0 | 0 |
| விஷ்ணு புராணம் .... | 3 | 0 | 0 |
| சூதசம்ஹிதை வசனம் .... | 4 | 0 | 0 |
| பக்த விஜயம் .... | 3 | 0 | 0 |

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

**பள்ளிக்கூடப் புத்தகங்கள்.**

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஜீவகன் சரிதை .... | 0 | 8 | 0 |
| மணிமேகலை சரிதை.... | 0 | 9 | 0 |
| கோவலன் சரிதை .... | 0 | 8 | 0 |
| நன்றியறியா மகள் .... | 0 | 12 | 0 |
| கிருஷ்ண விஜயம் .... | 1 | 4 | 0 |

**வால்மீக ராமாயணம்.**

பண்டித நடேச சாஸ்திரியார் மொழிபெயர்ப்பு.

ஆறு காண்டம் மட்டும்

[illegible]

உ

ஸ்ரீராமஜெயம்.

# கல்ப தரு.

# KALPA THARU.

EDITOR K. P. SESHADRI AIYANGAR.

சித்திர சகிதமான ஒரு தமிழ் மாதப் பத்திரிகை.

புஸ்தகம் 5. | 1923ஞு செப்டம்பர் | சஞ்சிகை 3,

## CALLING THE MOON

### PERIALWAR THIRUMOZHI

## அம்புலியை அழைத்தல்.

1. தன்முகத் துச்சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்
பொன்முகக் கிண்கிணி யார்ப்பப் புழுதி யளைகின்றான்
என்மகன் கோவிந்தன் கூத்தினை யிள மாமதீ !
நின்முகம் கண்ணுள வாகில் நீயிங்கே நோக்கிப்போ

2. என்சிறுக் குட்ட னெனக்கோ ரின்னமு தெம்பிரான்
தன்சிறுக் கைகளால் காட்டிக் காட்டி யழைக்கின்றான்
அஞ்சன வண்ணனோ டாட லாட வுறுதியால்
மஞ்சில் மறையாதே மாமதீ! மகிழ்ந் தோடிவா !

3. சுற்று மொளி வட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யிலு மென்ம கன்முகம் நேரொவ்வாய்,
வித்தகன் வேங்கட வாண னுன்னை விளிக்கின்ற,
கைத்தலம் நோவாமே அம்புலீ! கடி தோடிவா.

4. சக்கரக் கையன் தடங்கண் ணல்ம லரவிழித்து
ஒக்கலை மேலிருந் துன்னையே சுட்டிக் காட்டுங்காண்
தக்க தறிதியேல் சந்தி ரா! சலஞ் செய்யாதே.
மக்கட் பெறுத மலட னல்லையேல் வாகண்டாய்.

5. அழகிய வாயி லமுத வூறல் தெளிவுரு
மழலைமுற் ருத விளஞ்சொல்லா லுன்னைக் கூவுகின்ருன்
குழகன் சிரீதரன் கூவக் கூவநீ போதியேல்
புழையில வாகா வேநின் செவிபுகர் மாமதீ!

6. தண்டொடு சக்கரம் சார்ங்க மேந்தும் தடக்கையன்
கண்டுயில் கொள்ளக் கருதிக் கொட்டாவி கொள்கின்ருன்
உண்ட முலைப்பா லருகண் டாயுறங் காவிடில்
விண்டனில் மன்னிய மாமதீ! விரைந் தோடிவா!

7. பாலக னென்று பரிபவம்செய்யேல் பண்டொருநாள்
ஆலி னிலைவ ளர்ந்த சிறுக்க னவனிவன்
மேலெழப் பாய்ந்து பிடித்துக் கொள்ளும் வெகுளுமேல்
மாலை மதியாதே மாமதீ! மகிழ்ந் தோடிவா.

8. சிறியனென் றென்னிளஞ் சிங்கத்தை யிக ழேலிகண்டாய்!
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்!
சிறுமைப் பிழைகொள்ளில் நீயுமுன் தேவைக் குரியைக்காண்.
நிறைமதீ! நெமோல் விரைந் துன்னைக் கூவுகின்ருன்

9. தாழியில் வெண்ணெய் தடங்கை யார விழுங்கிய
பேழை வயிற்றெம் பிரான்கண் டாயுன்னைக் கூவுகின்ருன்
ஆழிகொண் டுன்னை யெறியும் ஐயுற வில்லைகாண்
வாழ வுறுதியேல் மாமதீ! மகிழ்ந் தோடிவா

10. மைத்தடங் கண்ணி யசோதை தன்மக னுக்குஇவை
ஒத்தன சொல்லி யுரைத்த மாற்றம் —ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டு சித்தன் விரித்த தமிழிவை
எத்தனை யும்சொல்ல வல்ல வர்க்கிட ரில்லையே.

"பெரியாழ்வார் திருமொழி"

# THE ORIGIN OF MAN.

By Pandit K. SADASIVA NAICKAR.

## மக்கட் பிறவி.

(36ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்குங்கால் ஐயம், திரிபு அறக்கற்றல் வேண்டும். ஐயமாவது உண்மைப்பொருள் ஈதெனத் துணியாது மயங்கல். திரிபாவது உண்மையை இன்மையாகவும் இன்மையை உண்மையாகவும் உணர்தல். மக்கள் சின்னாட் பல்பிணி உடையராயிருத்தலின் அறிவு தரு நூல்களையே கற்றல்வேண்டும். அவ்வாறு கற்றபின் அந்நெறிக்கண்ணே நிற்றல் வேண்டும். அவ்வாறு செய்யாக்கால் கல்வி பயன் படாது போதல், பிணிதீர மருந்துண்டானொருவன் அம்மருந்துக்குத் தக்கபடி உணவு, செயல்களைக் கொள்ளாக்கால் மருந்தினாற் பயனடையாது போவது போலாம்.

இனி அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே என்று அறிஞர் கூறுவாராகலின் கல்வியறிவிற்கும் பயன் அறம் முதலாகச் சொல்லப்பட்ட நாற்பொருளையும் பெற முயல்வதேயாம். அவையே மக்கட் பிறப்பின் பயனுமாம். ஆகவே இந்நாற் பொருளையும் சிறிதே விளக்குதும்:—

'அறம்' எனும் மொழியானது 'அறு' எனும் முதனிலையி னடியாகப் பிறந்த மொழி. ஆகவே அச்சொற்குப்பொருள் 'அறிவுடையோரால் வரையறுத்துச் சொல்லப்பட்டவற்றைச் செய்தல்' என்பதாம். அவ்வாறு வரையறுத்துச் சொல்லப்பட்டவை 'இல்லறம்', துறவறம், எனும் இரு பிரிவினுளடங்கும். இல்லறமாவது கற்புடை மனைவியோடு கூடிச்செய்யப்படும் அறம். மனையாட்டி சிறப்பிலளாயின் இல்லறம் ஒரு சிறிதும் பயன்படாது. ஆதலினன்றே தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் தாம் அருளிய நந்தாமொழியாந் தமிழ்மொழி மறைக்கண் இல்லறவியலில் முதற்கண் 'இல்வாழ்க்கை' அருளிப் பின்னர் 'வாழ்க்கைத் துணைநலம்', அருள்வாராயினர். மற்றும் ஆண்டு,

"மனை மாட்சி யில்லாள்க ணில்லாயின்
வாழ்க்கை எனைமாட்சித் தாயினுமில்"

எனவும் அருளினர்.

இல்லாள்கண் மனைமாட்சியாவது மனையறத்துக்குத் தக்க விருந்தோம்பல், அன்புடைமை, இனியவைகூறல் முதலியபண்புடையளாயும், தற்கொண்டானது பொருள் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்பவளாயும், கற்பென்னும் மனங்கலங்காத நிலையுள்ளவளாயும், தற்கொண்டானைப் பேணுபவளாயும், புகழை விரும்பியவளாயும் இருத்தல். இன்னதோர் மனையாட்டியோடு கூடி, இருவிழிகளும் ஒரு காலத்தே ஒரு பொருளையே நோக்குதல்போல் தலைவனும் தலைவியும் தம்முள் மனமொத்து, அறவியல் புடைய பிரம்மசாரிகள், துறவிகள் முதலியோரை அவ்வவர்க்கு வேண்டிய உண்டி, உடை, உறையுள், பிணியுற்றக்கால் மருந்து முதலிய கொடுத்துப்பேணி இல்லறத்தை நடத்தின் இம்மையிற் புகழும் மறுமையில் தெய்வலோகமும் பயனும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்.

துறவறமாவது பிறப்புத்துன்பமென்றறிந்து யானெனதென்னும் செருக்கற்று நிற்கும் நிலை. அன்னதோர் நிலையும் மனத்தைப்பொறுத்தது. ஆகவே மனம் அடங்கினார்க்கல்லது துறவறம் கைகூடாது. மன அடக்கமும் பற்பல பிறவிகளில் ஈடுபட்டு நன்மை தீமைகளைத் துய்த்தபின்னரே உண்டாம். அவ்வாறு துய்த்துணர்தற்கே இல்லறநெறி மக்கட்கு இன்றியமையாதாயிற்று.

உண்மையில் அறநெறி யொழுகுவார்க்கு "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தற னாகுல நீரபிற" "அழுக்காறவா [illegible] யின்னாச் சொன்னான்கு மிழுக்காக் [illegible] தறம்" எனும் அரு[illegible]

பொருளாவது உலகில் உயிர்கட்குவேண்டிய உணவுப்பொருள் முதலியன பெருக வேண்டி மக்கள் தமக்குள் செய்துகொண்டதோர் ஏற்பாடு. பொருள் இல்லையேல் இவ்வுலக இன்பம் ஒன்றும் கைகூடாது. ஆதலினன்றே "வறியார் இருமையறியார்" "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான்முடியும்" என மாணிக்கவாசக சுவாமிகளும், "அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க்—கிவ்வுலக மில்லாகி யாங்கு" எனத் திருவள்ளுவனாரும் அருள்வாராயினர். ஆகவே மக்களாய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் நல்லாற்றில் முயன்று பொருளையீட்டித் தாமுந் துய்த்து வறியார்க்குத் தம்மாலியன்றவரை யீந்து பயன் பெறு ல்வேண்டும். மேற்கூறிய இல்லறநெறி ஒழுகுவார்க்கு இப்பொருள் பெரிதும் இன்றியமையாதது ஆதலின் பொருள்நெறி நிற்பார் ஒவ்வொருவரும் "அறனீனு மின்பமுமீனுந் திறனறிந்து—தீதின்றி வந்த பொருள்" "காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு—மன்ன நீரார்க்கே யுள" எனும் அருமொழிகளைக் கடைப்பிடிக்க.

...ம் இன்பமென்பது காமவின்பமாகிய ... உயிர்கள் உடலோடு கூடியவ...பங்களுள் இவ்வின்பத்தின் மேற்பட்ட தொன்றில்லை. இவ்வின்பம் மிக நுண்ணிதாய், கணத்திற்றோன்றி மறைவதாய், ஐம்புலன்களையும் மனத்தினையும் ஒரே சமயத்துத் தன்வயப்படுத்துவதாய், துய்த்துணர்ந்தாலன்றி இன்ன தன்மைத் தெனச் சொல்ல இயலாததாய் இருத்தலின் 'சிற்றின்பம்' எனப்படும். உலகில் உயிர்கட்கு உடல்தருவான் வேண்டி இறைவன் இவ்வின்பத்தைத் தந்தனன் போலும்! இவ்வின்பத்து யானைமுதல் எறும்பீறாகச் சொல்லப்பட்ட உயிர்களெல்லாம் வசப்படுகின்றன வெனின் இதனை என் என்பது! உண்மையின் நோக்குவார்க்கு இவ்வின்பம் யாண்டினின்றும் பெறப்படுகின்றதோ அப்பொருள் மிகுதியும் இழிவுடைத்தென்பது தோன்றும். அவ்வாறு தோன்றுதலும் நன்று துய்த்தாலன்றித் தோன்றாது. ஆகவே மக்களாய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் ... துய்த்தே கழித்தல்வேண்டு... ...லினன்றே மக்கட்கு இல்லற... ...பெரிதும் வேண்டப்பட்டது. இவ்வின்பத்தை நந்தா மொழியாந் தனித்தமிழ் மொழிவாணர் 'அகப்பொருள்' என்ப. அதன் இலக்கணங்களையெல்லாம் தொல்காப்பியம், திருக்கோவையார், 'திருக்குறள்' முதலிய நூல்களிற்கண்டு களிப்புறுக. இந்நெறி நிற்பார் "அறத்தான் வருவதேயின்ப மற்றெல்லாம்—புறத்த புகழுமில" எனும் அரும்பாட்டை மறவாதொழிக.

'வீடு' எனும் சொல் 'விடு' எனும் பகுதி மாறுபட்டு நின்றது. ஆகவே அச்சொற்குப் பொருள் 'பிறப்பினின்றும் விடுபட்டோர் சேரிடம்' என்பதாம். மேற்கூறிய முப்பொருள்களுள் அறநெறி கடைப்பிடிப்பின் அதன்பயனாப் பொருளுமின்பமு முண்டாம். உண்டாகவே அவ்வவற்றின் உண்மையா னின்பமும், இன்மையாற்றுன்பமும் தோன்றும். தோன்றவே அவற்றின் உவர்ப்புண்டாம். உண்டாகவே இவ்வுலகப் பொருள்களின்மீது பற்றொழியும். ஒழியவே மனம் இறைவனோடு உயிர் வீடுபெற்று நிற்கும். இவ்வின்பம் என்றும் ஒருபடித்தாய் நிற்றலின் இதனைப் 'பேரின்பம்' என்ப.

இந்நாற்பொருள்களுள் 'அறம்' முதற்கண் கூறப்பட்டமையின் அதன் இன்றியமையாமை கூறாமலே விளங்கும் அஃதாவது அறமே எப்பொருளும் பயக்குமென்பது. ஆதலினன்றே

"சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங் காக்கமெவனோ வுயிர்க்கு"

"அறத்தினூஉங் காக்கமுமில்லை யதனை மறத்தலி னூங்கில்லை கேடு" எனும் அருமொழிகளெழுந்தன.

மும்மலங்களாற் கட்டுண்ட நமக்கெல்லாம் சிற்றறிவே இருத்தலின் உண்மையின் அறநெறி ஈதென உணர்தல் அரிதாம். ஆகவே பேரறிவுடைய இறைவன் வழிநிற்றல் வேண்டுமென்பது. அவ்வாறு நிற்பின் இறைவனுக்கு நம்மீது திருவருள்சுரக்க உண்மை தானே விளங்கும். இறைவன் வழி நிற்றலாவது, இறைவனே மெய்ப்பொருளென உணர்ந்து, அவன் எவ்வுயிரினும் பழத்திற் சுவைபோற் கலந்திருப்பன் என அறிந்து எவ்வுயிர்க்குந் தீங்குசெய்யாது ஒழுகலேயாம். உயிர்களிடத்து அன்பு காட்டாது இறைவனிடத்தே அன்புடையார்

போல் ஒழுகல் போலியாம் என்க. ஆதலின் "அருளிலார்க் கவ்வுலகமில்லை" என்பது ஒவ்வொருவர் உள்ளத்திலும் பசுமரத்தாணி போற் பதிவதாக.

இக்கருத்தெல்லாம் படவன்றே தமிழ் மறையும் கல்வியறிவிற்குப் பயன் கூறுவான்வேண்டி,

கற்றத னாலாய பயனென் கொல் வாலறி வனற்றா டொழா அரெனின்
எனக் கூறுவதாயிற்று.

இதுகாறும் கூறியவாற்றால் மக்கட்பிறவி பெறுதல் அருமைத்தென்பதும், மக்களாய்ப் பிறந்தாலும் பகுத்தறிவில்லாக்கால் பிறப்பாற் பயனில்லையென்பதும், அறிவு பெருகக் கற்றல்வேண்டுமென்பதும், கல்வி யறிவிற்குப்பயன் கடவுளைத்தொழுது பிறவுயிர்கட்குத் தத்தம்மால் இயன்றதோர் நன்றியாற்றல் என்பதும் பெறப்படுகின்றது.

எய்தற்கரிய மக்கள் யாக்கை யெய்திய நாமெல்லாம் இறைவன் வழிநின்று பிறப்பிறப்புத் துன்பம் ஒழிந்து பேரின்பம்பெறு மாறு மலர் மிசை யேகினான் மாணடியையே சேர்வோமாக.

கீ. சதாசிவன்
தமிழ்ப் புலவன்,
முத்தையால் பேட்டை ஹை ஸ்கூல்
சென்னை.

---

## UNCLEAN MOUTH IN INFLUENZA.

## "இன்புளுயன்வா" சுரத்தில் அசுத்தமான வாய் தீமை விளைவித்தல்.

தேகத்தின் கண்ணுள்ள ஐம்பொறிகளில் எல்லாவற்றையும்விட 'வாய்' என்பது மிகவும் பரிசுத்தமாயிருக்கவேண்டியது. அதைச் சற்றுக்கவனியாமல் விட்டுவிட்டால் அதிக அசுத்தமடைந்துவிடும். வைத்திய பரிசீலனைசெய்த நிபுணர்கள் யாவரும் ஒருமனதாக 'அசுத்தமான வாய் அனேக புதிய வியாதிகளை வருவிக்கும் பல கிருமிகளுக்கு உறைவிடம்' என்று அபிப்பிராயப் படுகின்றார்கள். சொத்தைப் பிடித்துப்போன பல்லிலிருந்து சிறிது சவ்வு எடுத்து அதை பூதக்கண்ணாடி மூலமாகப் பரிசோதித்து ப்பார்த்தால் அந்தச் சவ்வில் நிறைய ஆயிரக்கணக்காக கிருமிகள் படர்ந்து இருக்கக் காணலாம். இவைகளில் சில, நெடியுள்ள திராவகத்தை யுண்டாக்க வல்லது. அதனால்தான் பல்லை நசித்துவிடவும் சொத்தைப் பிடிக்கவும் செய்கின்றன. அவைகளில் இன்னும்சில ஒரு தீங்கையும் விளைவிக்காதவை. அத்தகைய கிருமிகளை ஆங்கில வைத்தியர்கள் "Streppococcus" ஸ்ட்ரெப்போகோகஸ் என்ற பெயர் கொடுத்திருக்கின்றார்கள். 'மரணம் விளைவிக்கும் கிருமி' என்று அவைகளுக்குப் பெயர் அளிக்கினும் பொருந்தும். ஏனென்றால் அவைகள் மனிதர்களின் உயிரைக்கவரும் எமனது தூதர்கள் போலாம்.

பல் சொத்தைவிழுந்து வாய் அசுத்தமாகி மனிதர்கள் அவஸ்தைப்படுவது நமது தேசத்தில் மிகவும் சாதாரணமாக விருக்கின்றது. அசுத்தமான வாய், பல் முதலியவைகளிலிருந்து கிருமிகள் பல்லின் ஈறுகளில் போய்ச்சேர்கின்றன. இன்னும் நாசித் துவாரங்களிலுள்ள மெல்லிய சவ்வுகளுக்கும் குடியேறுகின்றன. அவைகள் அவ்விதம் குடியேறும்போது அந்தந்த பாகங்கள் வீக்கத்தையும், நோயையும் அடைகின்றன. அவ்விதம் வீக்கமடைவது தேகாரோக்கியத்திற்கு அபாயத்தை விளைவிக்கும். சில நாட்களுக்குள் அக்கிருமியின் விஷசத்து ரத்தக்குழாய்களினுள்ளும் புகுந்து தேகத்தின் மற்ற உறுப்புகளான, சுவாசப்பை, இருதயம், மூத்திரப்பை, ஈ[illegible] ஙில்கள் முதலிய பாகங்களுக்கும்[illegible] சேர்கின்றது. ஆகவே அசுத்[illegible]

எத்தன்மையான அபாயத்தையும் அவஸ்தை யையும் உண்டாக்கும் என்பதை சற்று கவனியுங்கள்.

"இன்புளுயன்ஸா" சுரம் உலகத்தில் எத்தன்மையான மரணங்களை உண்டாக்கியிருக்கின்றது என்பது யாவரும் அறிந்த விஷயமே. அத்தகைய கோடிக்கணக்கான மரணங்களுக்கு 'மரணம் விளைவிக்கும் கிருமி'தான் காரண பூதமாக விருந்தது. இன்புளுயன்ஸா சுரம் 100ல் 43 பேருக்கு இக்கிருமிகளால்தான் உண்டாகின்றது. அந்த சுரம் தொத்துந் தன்மையது. மேற்கூறப்பட்டவைகளினால் வாய் மிகவும் சுத்தமாகவும், துர்நாற்றமில்லாமல் வைத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகவும் கடமையாகவும் இருக்கின்றது. அசுத்தமான வாயிலிருந்து உண்டாகும் விஷத்தன்மையான வியாதியை உடனே பரிகரிக்க வழிதேடவேண்டும். சற்று தாமதித்தால் தேகமெங்கும் அக்கிருமிகள் வியாபித்து பிறகு தேகத்தின் வலிவைக் கிரகித்து பலவீனப்படுத்தி வியாதி வெற்றிபெற்று விடும். அதனால் நோயாளி நோய்க்கு இரையாகிவிட நேரிடும்.

"வருமுன் காப்பதே சிறந்த விதி என்பதைக் கைக்கொண்டு உடனே தக்க பரிகாரங்களைத் தேடவேண்டும். மனிதர்களுக்கு முதன் முதல் பரிசுத்தமான வாய் பெரியநோய் பரிகாரி என்று போதிக்க வேண்டும். "இன்புளுயன்ஸா" பரவியிருக்கும் காலத்து இவ்விதியை மறவாது நடக்கவேண்டும். பல் வைத்தியர்களுடன் ஆலோசனைசெய்ய, அவர்கள் அதிக சந்தோஷத்துடன் தங்களது அபிப்பிராயத்தைச் சொல்லுவார்கள்.

முதன் முதலில் பல்லினுள்ள காரைகளை சுறண்டி விடுவார்கள். சொத்தை பிடித்த பற்களைப் பிடுங்கியும் விடுவார்கள். பற்களைப் பரிசுத்தமாகச் செய்து விடுவார்கள். பல் வைத்தியர்களைக்கண்டு மேற்சொன்னவைகளைமட்டும் செய்துவிட்டால் போதாது. பல்லைக் குறித்து ஒவ்வொருவனும் அதிக சுக்கிரதையாக விருக்கவேண்டும். நல்ல [illegible]ச்சிகளையும், நூதன பல் சுத்திகரிக்கும் [illegible]ிய மருந்து வகைகளையும் கை[illegible] சாப்பி[illegible] பின்பும், நித்திரைபோவது முன்பும், கழுவி, சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும், ஒவ்வொரு சமயங்களில் சாதாரண உப்பை ஒரு கரண்டியளவு எடுத்து ஒருடம்ளர் தண்ணீரில் போட்டு கரைத்து வாய் கொப்புளிக்க வேண்டும். இம்முறையைக் கையாண்டுவந்தால் இன்புளுயன்ஸாசுரத்துடன் எதிர்த்து ஜயமடையலாம். தற்காலத்து யுத்தவீரன் எவ்விதம் நூதன ஆயுதங்களுடன் ஆரோகணித்து யுத்தகளத்திற்கு போர்புரியச் செல்கின்றனே அவ்விதம் தற்கால மனிதர்கள், உலக வைத்திய சிகாமணிகள் கண்டுபிடித்த புதிய முறைகள், மருந்துகளைக்கொண்டு புதிய வியாதிகளை எதிர்த்து வெற்றிபெறலாம். சாஸ்திரீயமானதும், சுகாதாரமானதுமான வாழ்க்கையைப்பெற முயலுங்கள். சுகாதாரத்திற்கு அடிப்படையாக விருப்பது பரிசுத்தமான வாய் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். வெற்றிலைப்பாக்குப் போட்டுக்கொண்ட பின்னர் நன்றாக வாயைக் கொப்புளித்து உமிழவேண்டும். ஏனென்றால் சுண்ணம்பு பற்களில் ஒட்டிக் கரைகளை உண்டாக்கிவிடும். பற்களை செந்நிறமாக்கியும் விடும். நல்ல பரிசுத்தமான வாயைப் பெற்றிரு. நீ இன்புளுயன்ஸா சுரம் மட்டும் அல்ல மற்ற எந்தவிதமான வியாதிகளையும் எதிர்த்து வெற்றிபெறுவது திண்ணம்.

"நல்ல பரிசுத்தமான பல்— நோயற்ற வாழ்வையும் சுகாதாத்தையும் தரவல்லது" என்பதை உனது வாழ்வில் என்றும் மறக்காமல் கவனித்து வரவண்டும்

'திருபுராந்தகன்.'

## சூரியகுமாரி

அல்லது

ஸஹாரா பாலைவனத்தின் பரம ரகசியம்.

ஒரு பெரிய நாவல்.

ஆதி முதல் அந்தம்வரையில் படிக்கப் படிக்கத் தேனினும் தித்திக்கும் மாவினும் மதுரமானது. 'கல்பதருவில்' மாதா மாதம் வெளிவரும் உடனே. சந்தாசேரவும். இப்பொழுதே [illegible]ன்று அனுப்பவும்.

# WISE SAYINGS.
# முது மொழிக் களஞ்சியம்.

தன்னைப் பொறுத்திருக்கும் ஒவ்வொன்றும் மோக்ஷசாம்ராஜ்யம். பிறனைப் பொறுத்திருக்கும் ஒவ்வொன்றும் துக்கத்தைக்கொடுக்கும். மனு.

* * *

ஒரு பெரிய மரத்துண்டு சமுத்திரத்தின் வேகத்தால் மற்றொரு மரத்துண்டோடு மோதுகின்றது. உடனே அதேபோல் வேறு பிரிக்கப்பட்டுப் போகின்றது. அம்மாதிரியேதான் ஒரு பிராணி மற்றொரு பிராணி பிராணியுடன் சந்திக்கின்றது.

"மஹா பாரதம்"

* * *

கிரீஸ் தேசத்தவர்கள் தங்களைத் தாங்களே அறிந்துகொள்வதுதான் சிறந்த ஞானம் என்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியர்களோ தங்களுடைய ஆன்மாவை உணர்வதுதான் சிறந்த ஞானம் என்று கருதுகின்றார்கள். மாக்ஸ் முல்லர்.

* * *

இயற்கை மாது தாவரவர்க்கத்தில் நித்திரை புரிகின்றாள். பிராணி வர்க்கங்களில் ஸ்வப்பனங் காண்கின்றாள். மனிதவர்க்கத்தில் விழித்துக்கொள்கின்றாள்.

ஸ்கீலிங்கு.

* * *

மனிதன் சர்வ விஷயங்களையும் அறிந்து நிறைந்தவன் என்று எப்பொழுது சொல்லலாமெனில் கடவுளிடத்தில் முழுவதினும் நம்பி ஐக்கியமடைந்தால்தான் சொல்லக் கூடும். தாமஸ்குஆக்வினஸ்.

* * *

இந்திரன், கௌதமர் மனைவி அகலிகை மீது விருப்பமுற்றுத் தேகமுழுதும் யோனிக்கண்களாக அமைவுறும்படி சாபத்தை ஏற்றுக்கொண்டானன்றோ? சந்திரன் ஆசிரியரது மனைவியை தாயைப்போல் கருதாது அவளது மாயையிற்சிக்கி அல்லற் படவில்லையா? திரௌபதிமீது காமமுற்ற கீசகன் பீமனாலேயே உயிர்துறக்க நேர்ந்ததே! சீதையை இச்சித்த இராவணன் கதி என்னாயிற்று! கடலில் அகப்பட்ட துரும்பானது கரைகாணாது சுழல்வதுபோல பிறவிக்கடலில் இன்பதுன்பங்களால் மோதுண்ணும் வரைக்கும் மோக்ஷமாகிய கரையை ஒருபோதும் அணுகமாட்டாய்.

* * *

யானையைக் குளிப்பாட்டி அதனிஷ்டம் போல் விட்டுவிட்டால் வெகுசீக்கிரத்தில் அழுக்காக்கிக்கொள்ளும். தொழுவத்தில் கட்டிவிட்டால் அழுக்காக்கிக் கொள்ளாது. ஸாது சங்கத்தாரால் தூய்மையடைந்த ஒருவன் உலகத்தாரோடு பழகுவானாகில் தூய்மையை இழக்கநேரிடும். ஈசுவரனிடத்தில் மனதை நிறுத்தினால்மட்டும் இழக்க நேரிடாது. தொழுவத்திலிருந்து தரித்துவிட்ட யானை மரங்களையும் செடிகளையும் பிடுங்கி எறியும். பாகன் அங்குசத்தால் குத்தினதும் அடங்கிவிடும். அடக்கி ஆளாத மனம் வீண் எண்ணங்களில் செல்லும். விவேகத்தால் தாக்குண்டால் கண்விழித்துக் கொள்ளும்.

* * *

குழந்தை தனியாக மரப்பாவையை வைத்து விளையாடும்போது கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கும். ஒப்பற்ற வைரக்குவியல்களை அதன்முன்னர்க் குவித்தபோதிலும் நிராகரித்துவிடும். நிராகரித்துவிளையாடும் போது தாயைச் சிறிதும் நினைப்பதில்லை. தாய் அவ்வழி குழந்தையைப் பாராதது போல் ஏகுவாளாயினும் பாவையை அப்பால் எறிந்து அம்மா, அம்மா! என ஓலமிட்டு அவளையும் பின்தொடரும்.

* * *

அவ்வாறே நீயும் செல்வம் புகழ் முதலான வைகளில்கருத்தைச்செலுத்திவேறொன்றை சிறிதும் பொருட்படுத்தாது உழல்கின்றனை. ஒருதரம் லோகமாதாவைத் தரிசனம் செய்தால் இவைகளில் அவா உனக்குச் சிறிதும் உண்டாகாது. எல்லாவற்றையும் திரஸ்காரஞ்செய்துவிட்டு அவளிடம் ஓட ... கொள்ளவேண்டும்.

(இ...

## ஜப்பானின் பயங்கர காக்ஷி.

பூமியினுள்ளிருக்கும் அக்கினி வெளிப்பட முயலும்போது பூமி நடுங்கி அதிரும். சிலஸ்தலங்கள் கடலினுள் அமிழ்ந்துபோகும். எங்கும் ஜலமாகயிருக்கும். கடலுள் திடீரென தீவுகள் தோன்றும்; அவ்வக்கினி பூமியை உடைத்துக்கொண்டு வெளிப்பட்டு பெருந் துன்பம் விளைக்கும். ஜப்பானில் இக்காரணங்களால் லக்ஷக் கணக்கானவர் மாண்டார்கள். கடல் கொந்தளிப்பினாலும், அக்கினியினாலும் நாடு அழிக்கப்பட்டது. பெரியபட்டணங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. அதுபோல நம்முடைய தேகத்திலும் வாதசேஷ்டை கிளம்பும்போது பல பல இடங்களில் வலியும், வீக்கங்களும், கைகால் முடக்கங்களும், ஜீவனாசமும் உண்டாகும். முந்தினதை தடுக்க ஓர் உபாயமும் இல்லை. ஆனால் வாதசேஷ்டைகள் எவ்வித கொடுமையானவையா யிருந்தாலும் அவற்றை கூட்டோடறுத்து பூரண சுகங்கொடுக்கும் ராஜ ஔஷதமே.

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் உத்தம சஞ்சீவி.

ADVT.

## THE ANCIENT DRAVIDIAN INDUSTRIES AND COMMERCE.

BY M.R.RY. M. RAGHAVA AIYANGAR AVERGAL.

## பண்டைய கைத்தொழில்களும் வியாபாரமும்.

(முன் சஞ்சிகை 56-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்தகைய குணங்களுடன், தமிழ்மக்கள், பண்டைக்காலத்தே அந்நிய நாடுகளிலும் உண்ணாடுகளிலும் தங்கள் வாணிப விர்த்தியைப் பெருக்கி வந்தார்கள். வெளிநாடுகளுடன், இவர்கள் முக்கியமாகச்செய்துபோந்த வியாபாரம் துணி, மணி, மிளகு முதலியனவாம். நம்நாட்டில் நெய்யப் பட்ட துணிகள் மிகப் பழங்காலத்தேயே அந்நியரால் ஆச்சரியத்துடன் புகழப்பட்டுள்ளன. ஏறக்குறைய இன்றைக்கு 2400வருஷங்கட்கு முன் பிறந்தவரும், "சரித்திர வாசிரியர்க் கெல்லாந் கா·ப்பன்" என்று புகழப்படு பவருமாகிய "ஹைரோடடஸ்" என்னும் யவனர் நமது பஞ்சைப்பற்றிப் பேசும்போது, "அங்கு (இந்தியாவில்) மரங்களில் வளரும் கம்பளி" என்றும், "அஃது ஆட்டு ரோமங்களால் உண்டாம் கம்பளிகளினும் விசேடமானது" என்றும் கூறுகின்றார்.* இத்துணி நெய்தற்றொழில், இலக்கியங்களில், "காருக வினை" என்று கூறப்படும். இதனை,

"பருத்திநூல் பட்டுநூல் அமைத்தாடை யாக்கலும்
சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்."

என்னுந் திவாகரத்தாலும் "காருக ரிருக்கை", "காருக மடந்தை" என வரும் முன்னூற்றொடர்களாலும் உணர்க. தத்தம் கிரகங்களில் இருந்து கொண்டே செய்து வந்த தொழிலாதலால் அப்பெயர் பெற்றது. முற்காலத்தே, கிரகங்களில் இருந்துகொண்டே அருமையான ஆடைவகைகள் நெய்தற்கு வேண்டிய நுண்ணிய நூலிழைகள் முழுதும் வீட்டுப்பெண் பாலரால் நூற்கப்பட்டன என்பதற்கு பற்பல மேற்கோள்கள் தமிழில் காணலாம். உதாரணமாக— "பருத்திப் பெண்டின் பனுவ லன்ன" என வரும் புறநானூற்றடிக்கு "பருத்தி நூற்கும் பெண்டாட்டியது சுகிர்ந்த பஞ்சுபோன்ற" என்று கூறப்பட்ட உரையும்,

"பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு."

என்னும் நன்னூற் பாயிரச்செய்யுளும், முற்கூறிய விஷயத்துக்குத் தக்க சான்றுகளாம். இவற்றுள், பின்னதாகிய வெண்பாவிலே பஞ்சிநூலையும் உருவகப்படுத்திய பவணந்தியார், புலவனைச் சேயிழையாகக் கூறிப்போ

* 8. "செந்தமிழ்"—தொகுதி 5, பக்கம் 15.

மாட்சியான நூனூற்றல் ; மகளிர் தொழில் என்பது மலை யிலக்காம். "நுண்ணி பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன் மகடூஉத்தனது செயற்கை நலந்தோன்ற ஓரிழைப் படுத்தலாம் உலகத்து நுனூற்றல் என்பது" என வரும் இறையனார் களவிபலுரை வாக்கியமும் இங்கே கவனிக்கத் தக்கது. இழை நூற்றல் ஸ்திரீகள் கையாண்ட தொழிலென்பது இருக்கு வேதத் திலும் அறியப்பட்டது*. இவ்வழக்கம் இன்றும் நம்நாட்டிற் பலவிடங்களில் நடைபெறுவதேயாம். பழையகாலத்தில், தேர்ந்த பெண்டிராற் செய்யப் படும் நூல் நூற்றல், நெய்தல் முதலிய தொழில்களை அரசாங்கத்தார், தனி அதிகாரிகளைக்கொண்டு நாட்டில் மேற்பார்க்கும்படிசெய்து, விருத்திசெய்து வந்தனரென்பதும், அவ்வதிகாரியும், நெய்தல் வேலைசெய்யும் மகளிரும் கவ்னிக்கவேண்டிய விதிகள் ஏற்படுத்தியிருந்தனரென்பதும், சாணக்கிய அர்த்தசாஸ்திரம், இரண்டாம்பாகம் 23-வது "ஸூத்ராத்யக்ஷா" என்ற அதிகாரத்தில் விரித்துக் கூறப்பட்டிருத்தலால் விளங்கத் தக்கது. இனிச் சிலப்பதிகாரத்தே:

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

என்னும் அடிகளின் உரையிலே, "மயிரினும்" என்பதற்கு "எலி மயிரா னும்" என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இவ்வெலிமயிராடை மிகுந்த குளிரையும் தாங்கக் கூடியதென்பதும் பிற விஷயங்களும் சீவக சிந்தாமணி யில் வரும்,

......................கோதை மாதரார்
பங்க யப்பகைப் பருவம் வந்தென
எங்கு மில்லன எலிமயிர்த் தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வை மேயினர்

(முத்தியிலம்பகம்-82.)

"செந்நெருப் புணுஞ் செவ்வெலிம்மயிர்
அந்நெருப் பள வாய்பொற் கம்பலம்
மன்னுருப்பன மகிழ்ந்து தாங்கினர்
என்னரொப்பு மில் லவர்களென்பவே"

(ஷை-87.)

"பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்ப்பன கண்கொளாதன
எலிமயிர்ப் போர்வை"

(இலக்கணை-94.)

என்னும் பாடல்களாலும் அறியலாம். இவ்வெலி மயிரால் அமைந்த ஆடை எவ்வளவு அருமை யாதல் வேண்டும்!

இதுபோலத் தமிழ்நாட்டிலே அப்போது வழங்கிவந்த பட்டாடை ...ல் "பலவகைப்பட்ட தொகுதி" சிலப்பதிகாரத்தால் தெரிய வருகின்

*... in Ancient India Part-1, page 44.

றன. அவற்றின் பெயர்கள், கேட்பதற்கு மிகவும் இன்பம் பயப்பனவாம். அவை வருமாறு:—

"கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி" (சிலப்பதி—336-பக்.)

இவற்றால் எண்ணிறந்த ஆடைவகைகள் முன்பு வழங்கின என்பது தெளிவாம். இவை, குழிப்பாடி கலிங்கம் முதலிய ஊர்களிலே நெய்யப்பட்டு வந்தன. இத்தகைய ஆடைகளிலே சிறந்தவைகள் சில, சங்க விலக்கியங்களில், பின்வருமாறு புகழப்பட்டுள்ளன:—

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை நல்கி" (பொருநராற்-82-83.)

(உரை) கண்ணிற் பார்வை, இஃது இழைபோனவழியென்று குறித்துப் பார்[illegible]ராத நுண்மை உடையவாய், பூத்தொழில் முற்றுப் பெற்றமையால் பாம்பினது யொத்த துகிலைக்கொடுத்து

"காம்பு சொலித்தன்ன அறுவை" (சிறுபான்–2[illegible]

(உரை) மூக்கிலாடையை உரித்தாலொத்த மாசில்லாத உடை

"கண்ணுமை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண அறுவையர்"—(மணிமேகலை-காதை-28.)

"* ஆவி யன்ன அவிர்நூற் கலிங்கம்" (பெரும்பாண்-469.)

"பாம்பு பயந்தன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியன் இழையணி வாரா
ஒண்பூங் கலிங்கம்" (புறம்-383.)

(உரை) பாம்புச் சட்டை போறலால் அது பயந்ததுபோன்ற வடிவுடையனவும், மூங்கிற்கழையில் உண்டாம் ஆடைபோல, இழைப்புகண்ணுக்குத் தோன்றாதனவும், ஒள்ளிய பூத்தொழில் உடைறனவுமான ஆடை என்க.

இவைபோன்ற புகழ்ச்சிகள் பழையநூல்களில் அதிகமாம். இத்தகை ஆடையாபரண முதலியவை செய்யுந்தொழிலைப் படித்தறிதற்குரிய கருவிகளும் முன்பு இல்லாமற் போகவில்லை. யாப்பருங்கல விருத்தியில், ஓரிடத்தே, "இவற்றை மந்திரவாத மருத்துவநூலும் சாமுத்திரிகமும் நிலைத்துநூலும் ஆயுதநூலும் பத்து விச்சையும் ஆடைநூலும் அணிகலநூலும் அருங்கலநூலு முதலியவற்று ளுணர்க" எனவரும் வாக்கியத்தால், முற்காலத்தில், பலதொழில்களையும் அறிதற்குரிய கருவிநூல்கள் வழங்கி வந்தனவென்பது தெளிவாம். அன்றியும்,

"எரண முருவம் யோகம் இசைகணக்கு இரதம் சாலம்
தாரண மறமே சந்தம் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்டதந்தோ வழிவழிப் பெயரு மாள."

* ஆவி—பாலாவி.

என்னும் பாடலும்புறம் 166-ம் செய்யுளில் "மூவேழ் துறையும்" என்பதன் விசேடவுரையிலே "இருபத்தொரு கூறுபட்ட அர்த்தநூல்" (Political Economy) எனக் கூறப்பட்டிருப்பதும் "உல்லியர் கூவநூலுணர்வோர்" என்னுந் திவாகர சூத்திரமும் பிறவும் முற்காலத்தே தொழில்நிலை பொருளாதார நிலைகளை அறிதற்கு வேண்டிய நூல்கள் தமிழ் மொழியில் மலிந்திருந்தன என்பதை நன்கு விளக்கக் கூடியன.

இந்நூல்களெல்லாம் இப்பொழுது யாண்டுள்ளன! இங்ஙனம் முற்காலத்தில் ஆடைக்குப் பேர்போன நாடாய் விளங்கி, பிறநாடுகளின் மானத்தைக் காத்துவந்த நம் பரதகண்டம் நம் காலத்தில் ஏறக்குறைய அப்பெயர் போனதேயாகி, தன்மானத்தைக் காத்தற்குப் பிறர்கையை அபேக்ஷிப்பதாக மாறிவிட்டது. இது நம்மவர்க்குப் பெரிதும் துக்கமும் வெட்சமும் தரத்தக்கதன்றோ? முன்னாளில், இவ்வருமையான துணிகளுடன், மிளகு, தந்தம், முத்து முதலிய இயற்கைப்பொருள்களையும் வாங்கிச் செல்லும்பொருட்டு, காவிரிப்பூம்பட்டினம், முசிரி, தொண்டி முதலிய ...ற்கரைப் பட்டினங்களில் யவன வியாபாரிகள் தங்கள் கப்பல்களுடன் ...ாக இறங்கி வந்தனர். சிலப்பதிகாரத்தே,

"கயவாய் மருங்கிற் காண்டோர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புறம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"

எனவும், அக நானூற்றில்,

"யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி" *

எனவும் பிறவாறுங் கூறப்பட்டிருத்தல் காண்க. இவ் யவனர் தம்நாடுகளிலிருந்து இங்கு 'இறக்குமதி' செய்த பொருள்கள், முக்கியமாக, சாராயம், பித்தளை, கண்ணாடி என்பனவாம். இவற்றுள் சாராயம் தமிழ்ப் பேரரசராலும் சிற்றரசராலும் விரும்பி உபயோகப் படுத்தப்பட்டு வந்தது. இச் செய்தி,

"யவனர்—நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஒங்குவாள் மாற!" (புறம். 56)

என நக்கீரனார், பாண்டியன்-நன்மாறனை நோக்கி, வாழ்த்துதலால் தெளியப்படும். இவ்வாறு தமிழ் நாட்டில் மலிந்திருந்த யவனர் என்பவர் கிரேக்கம் அரபியா முதலிய மேனாடுகளிலிருந்து வந்தவர்களே. இவருள் கிரேக்க யவனர் இங்குவந்து வியாபாரஞ் செய்தவராயினும், சங்க நாளிலும் அதன் பின்பும் தமிழகத்தில் மிகுதியாகத் தங்கினவர் சோனகர் என்னும் யவன

* யவனவியாபாரிகளால் கொண்டுவரப்பட்டதும் செய்தொழிலால் மாட்சிமை ...மான நல்ல கப்பல்கள், தாம் புறப்படும்போது ஸ்வர்ணங்களோடுவந்து, ... மிளகு மூட்டைகளுடன் பெயர்கின்ற வளப்பம்பொருந்திய முசிரி ... பொருள்.

ராவர். தமிழர் கூறும் பதினெண் தேயங்களுள் ஒன்றான சோனகம் என்பது, பரதகண்டத்துக்கு மேல்பாலுள்ள நாடுகளி லொன்று என்று சொல்லப்படுதலால், அஃது அராபியா என்னுந் தேசமாகக் கருதப்படுகிறது தென்னாட்டுக் காயற்பட்டினம், கீழைக்கரை முதலிய கடற்கரைப் பக்கங்களிலே இக்காலத்தும் இச்சோனகர் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கட்கு வழங்கும் "லப்பை" என்னும் பெயர் இவர்களது பூர்வ பாஷையாகிய அரபிச்சொல் என்பர். இவரெல்லாம், பிற்காலத்தே, தங்கள் பூர்வதேசத்தாரைப்போல, மகமதிய மார்க்கத்தைத் தழுவிக்கொண்டனர். இச்சோனகர் ஏனைத் தமிழகத்துருக்கருடன் சம்பந்தமுடையவர் அல்லர். இவர்கள், முற்காலத்தே, காவிரிப்பூம்பட்டினத்து வசித்துவந்த வியாபாரக் கூட்டத்தைச் சேர்ந்தவரென்றும், பிற்காலத்திற்றான் அங்குநின்றும் பாண்டி நாடு அடைந்தவரென்றும் தங்கள் ஆதி வரலாறு கூறுகின்றார்கள். இச்சோனகரது பூர்வபாஷை அரபியேயாயினும் பன்னூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் தங்கிவிட்டவர்களாதலாலும், தமிழப்பெண்களை மணம்புரிந்தும் தமிழர் வழக்கங்களிலேயே பழகியும் வந்தமையாலும் இவர்கள் தமிழ்மொழியே பேசுவோராயினர். தமிழ்மக்கள் இச்சோனகரை யவனரென்னும் பெயரால் அழைத்து வந்தனரென்பது, 'சோனகர் யவனர்' என்னுந் திவாகரத்தாலும், பத்துப்பாட்டில், யவனரெனுஞ்சொல் வருமிடமெல்லாம் நச்சினார்க்கினியர் "சோனகர்" என்றே உரைகூறிப் போதலாலும் விளங்கத் தக்கது. அடியார்க்கு நல்லார் சோனகரெல்லாம் மகமதியராயிருத்தல் கருதி, யவனர்-துருக்கர் என்றார். (சிலப். பக். 333) இச்சோனகர்க்குள் 'மரக்காயர்" என்னும் பட்டப்பெயர் வழங்குகிறது. இவர் ஆதிமுதலே மரக்கலமியக்குந் தொழிலை கையாண்டமையால் இப்பெயர் வழங்கியதென்பர். இச்சொல், அரபிபாஷையில் கப்பலின் பெயராக வழங்கும் "மார்கல்" என்பதினின்று வந்ததெனக் கூறுதலும் உண்டு. இம் "மார்கல்" என்பதும் தமிழ் "மரக்கலம்" என்பதும் சொல்லினும் பொருளினும் ஒன்றியுள்ளமை கவனிக்கத்தக்கது. இது நிற்க, இனி, சிலப்பதிகாரத்து வரும்,

"ஓங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட
அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்"

என்பத னுரையிலே, அகிலில்—அரு மணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என்று சொல்லப்பட்ட பலவகைத் தொகுதியும்; ஆரத்தில்—மலையாரம், தீமுரண்பச்சை; கிழான்பச்சை, பச்சை வெட்டை, அரி சந்தனம், வேர், சுக்கொடியென்னுந் தொகுதியும்; வாசத்தில்—அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனிநீர், புழுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாசம், ஏதலம் என்னுந் தொகுதியும்; கர்ப்பூரத்தி[illegible]—மலைச்சரக்கு, கலை, அடை வூசரக்கு

ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மார்ப்பற்று, வாராசான், குமடெறிவான், உருக்குருக்கு, வாரேசு, சூடன், சீனச்சூடன் என்னும் தொகுதியும் கூறப் பட்டுள்ளன. இவை உண்ணாடுகளினின்றும் வெளிநாடுகளினின்றும் தமிழ கத்தில் அக்காலத்தே, இறக்குமதியான பொருள் வகைகளாதல் காண்க.

இனி பரதகண்டத்தேயுள்ள மற்றநாட்டுத் தொழிலாளரில் திறமை வாய்ந்த பலர் தமிழ்மக்களால் அபிமானிக்கப்பெற்று, தமிழ்த் தொழி லாளிகளுடன்கூடித் தங்கள் தொழிற்றிறமைகளைக் காட்டியும் வந்தார்கள். இது,

"மகத வினைஞரும் மாராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை".

என்னும் மணிமேகலை யடிகளால் தெளியப்படும். இவரது தொழில்களே யன்றி, கூர்ச்சரச் சிற்பவேலையும், * கோசலநாட்டு ஓவிய வேலையும் வற்சநாட்டுக் கம்மவேலையும் பிறவும் தமிழரால் பாராட்டப்பட்டன. ¶ இவ்வாறு, பூர்வீகர் பலவகைப்பட்ட கைத்தொழில்களிலும் பயிற்சிபெற் றிருந்ததோடு, கரும்பாலைகளில் விசேஷக் கவலைசெலுத்தியும், மிளகு வியாபாரத்தைப் பெருக்கியும், பல்வகைக் கள்ளுச் சமைத்தும், வெள் உப்பு உண்டாக்கியும், வியாபாரஞ்செய்து பேரூதியமடைந்து வந்தார்களென் பது மூன்னூல்களால் தெளிவாகிறது. முற்காலத்தே தொழில் செய்மாக் கள் வியாபாரிகள் முதலியோரது ஆரவாரமும் சிலப்பதிகாரத்தே இந்திர விழவூரெடுத்த காதையிலும் கடலாடு காதையிலும் கூறப்பட்ட அடியில் வரும் அடிகளைப் படித்து மகிழ்தல் இன்றியமையாதது.

"கயவாய் மருங்கிற் காண்டோர்த் தடுக்கும்
பயனள வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்
வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரும் நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்
ஆரமும் அகலுந் தூசுந் துகிரும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்

* ...மேகலை, காதை-18, அடி 152.
...காதை-19 107-ம் அடி அரும்பதவுரை.

காழியர் கூவியர் களநொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்.''

''மகர வாரி வளந்தந் தோங்கிய
நகர வீதி நடுவட் போகிக்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்குசென் றெய்தி
வண்ணமுஞ் சாந்து மலருஞ் சுண்ணமும்
பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்
காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்
கூவியர் காரகிற் குடக்கால் விளக்கமும்
நொடைநவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும்
இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்
விலங்குவலைப் பரதவர் மீன்றிமில் விளக்கமும்
கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்
எண்ணுவரம் பறியா வியைந்தொருங் கீண்டி
மலைப்பஃறாரமும் கடற்பஃறாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை.''

இவ்வாறு, இயற்கையும் செயற்கையுமான பண்டங்களைக்கொண்டு வியாபாரஞ்செய்து பெரும்பொருள் படைக்கும் வணிகரைத் தமிழரசர் பெரிதும் அபிமானித்து வந்தனர். வாணிபத்தால் செல்வமும் புகழும் சிறக்கப்படைத்த வணிகர்க்கு, அரசன் "எட்டி." என்னும் அரும் பட்டமும் அதற்கடையாளமான பொற்பூ வொன்றும் அளித்து, அவ... வ... கல் ப... ...பாக இருந்தது. மணி... ...வும்...

> "வாணிக மரபின் வருபொரு ளீட்டி
> நீணிதிச் செல்வனாய் நீள்நில வேந்தனால்
> எட்டிப் பூப்பெற்று இருமுப் பதின்யாண்டு
> ஒட்டிய செல்வத்து உயர்ந்தோ னாயினன்."

என ஒரு வணிகள் இவ்வாறு புகழப்பட்டிருத்தல் காண்க.

இவ்வணிகர் தாம்படைத்த செல்வச்சிறப்புக்கேற்ப, இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூவகையின ராவர். இவர்களைப்பற்றிய வரலாறு, அடியில் வரும் ஜீவ ஸம்போதனைப் பாட்டால் விளங்கும்.

> "இப்பர் கவிப்பர் பெருங்குடி வாணிகரென்
> றெப்புடைய மூவ ருரைக்குங்காற்—றப்பில்
> மிதியடியே றானைமிசை நோக்கினர்கள் காணா
> நிதியுடைய ராவர் நிலத்து." *

*இதன் உரை:—இப்பராவார்.—பொன்னின் ராசியை நடுவே குவித்து யானைமேலேறிக் குடையிடை நின்றால் ஒருவரையொருவர் காணவொண்ணாத பொன்னிராசியை யுடையார்; கவிப்பராவார்.—அப்படியே விருஷபத்தின்மேலேறிக் குடையிடை நின்றார் ஒருவர் ஒருவரைக் காணவொண்ணாத பொன்னிராசியை யுடையார். பெருங்குடி வணிகராவார்.—மிதியடிமேலேறிக் குடையிடை நின்றால் ஒருவ ரொருவரைக் காணவொண்[ணாத] பொன்னிராசியை யுடையராவார்." (தொடரும்.)

---

## A NEW INVENTION
## புதிய சிருஷ்டி.

### கம்பி இல்லாத தந்தி.

ஒரு இந்தியன் புதுவிதம் ஒன்று கண்டுபிடித்து ஜெயம்பெற்றார் என்ற சங்கதி டெல்லியிலிருந்து வெளிவந்திருக்கின்றது. கான்பஹதூர் றஹிமான்கான் என்பவர் தான் இதைக் கண்டு பிடித்திருக்கிறார். கம்பியில்லாத தந்திக்கு ஆகாயமே செல்லும் பாதை. இவர் கண்டுபிடித்திருக்கும் நூதனமோ தண்ணீர்வழியாம். மேல்நாட்டார் கண்டுபிடித்த விதத்திற்கும் உள்ள விசேஷ வித்தியாசம் இதுவே. யமுனாநதி கரையிலுள்ள ஒரு சிறுகுடிசையிலிருந்துகொண்டு தாம் கண்டுபிடித்த நூதன யந்திரங்களைச் சரியாய்ப் பரிசோதித்து பலரும் உபயோகிக்கக்கூடிய வண்ணம் முயற்சிக்கிறார். இப்படிப்பட்ட பெரிய வேலையை செய்வதற்குத் திரண்ட திரவியம் அவசியமாம். [இ]ராஜாங்கத்தாரும் குடிகளும்கூடி வேண்டிய [உதவி] செய்தாலன்றி சித்திபெற முடியாது. இப்படி முயற்சிசெய்து கொண்டிருக்கும் சமயத்தில், கம்பியில்லாத புது தந்தி யந்திரமொன்றை சொற்ப செலவில் செய்து சித்திப்பெற்றார். அதுமூலமாக ருஷியா, ஐரோப்பா தேசங்களிலிருந்து சமாச்சாரங்களை அறிந்ததாகச் சொல்லுகிறார். இது மூலமாகச் சித்திபெற்றால் இந்த அபூர்வயந்திரம் இந்தியாவில் சகலரும்வாங்கி உபயோகிக்கத் தக்கதாக மிகுந்த குறைந்தவிலைக்கு வந்துவிடுமாம். இவர் கண்டுபிடித்த யந்திரத்துக்கு வேறொரு சிலாக்கியமும் உண்டாம். அதாவாது நம்மில் அநேகர் சென்னை கோட்டைமைதானத்தில் பார்த்திருக்கிறபடி மேல்நாட்டார் அங்கே அமைத்திருப்பதுபோல் அதி உயர்வான இரும்பு கம்பங்கள், கம்பியில்லா தந்திகளை வாங்கவும் வெளியிடவும் அவசியமில்லையாம். இதன் முடிவு எப்படியிருக்குமோவென்று நாம் எல்லாரும் ஆவலாய் எதிர்பார்க்கிறோம்.

# Teaching - Its Practice.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

## விடைகளும் அவைகளின் இலக்ஷணங்களும்.

சரியான விடைகள் கீழ்வரும் இலக்கணங்களை யுடையவாக விருக்கும்:—

**சரியான விடைகள்** (1) கேள்விகளிற் கூறப்பட்டிருப்பதற்குச் சரியான விஷயங்கள் விடைகளில் இருக்கவேண்டும்.

(2) போதுமான விடைகள்: கேள்விகளில் என்ன விஷயத்தைக்குறித்து கேட்கப்பட்டிருக்கின்றதோ அவ்விஷயத்தை — போதுமான விஷயத்தைக் கொண்டிருப்பது—போதுமான விடை. அனாவசியமானதைத் தள்ளி அவசியமும் முக்கியமுமானதையே இவ் விடை கொண்டிருக்கும்.

(3) யோசனையுள்ள விடைகள்:

சிறுவர்களுக்கு ஒரு கேள்வி கேட்கப்படின் அக் கேள்வியின் பொருளைத் தெரிந்து கொள்வதற்குப் போதிய சாவகாசம் கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் தகுந்த சரியான விடைகள் பகர முடியும்.

உபாத்தியாயர் சரியான விடைகளைத் தான் ஏற்றுக் கொள்ளவேண்டும்; மற்றவைகளை நிராகரிக்கவேண்டும். தவறான விடைகள் பற்பல காரணங்களினால்

**தவறான விடைகள்.** உண்டாகின்றன. அவைமுறையே அறியாமையினாலும், தவறாகக் கேள்விகளை அர்த்தம் கொள்வதினாலும், ஊகையினாலுமே உண்டாகின்றன.

(1) அறியாமை: மாணவன் பாடத்தைக் கவனிக்காததால் உண்டாகின்றது.

(2) தவறாகக் கேள்விகளை அர்த்தம் கொள்ளுதல்; இது சாதாரணமாக உபாத்தியாயருடைய குற்றத்தினால் நேருகின்றது. அவரது கேள்விகள் தெளிவாகவும், ஸ்பஷ்டமாகவும், சுலபமான பதங்களால் சொல்லப்படாதனவாயுமிருக்கின்றன. இத்தவறுகளைச் சரிப்படுத்துவதற்கு கேள்விகளை இன்னும் தெளிவாகவும் பிள்ளைகள் தெரிந்து கொள்ளும்படியும் செய்யவேண்டும்.

(3) ஊகிப்பது:—மாணவனது அஜாக்கிரதையாலும், சோம்பேறித்தனத்தினாலும், அவசரப் பட்டுச் சொல்லும் தீர்மானங்களினாலும் உண்டாகின்றன.

பயிற்சி யடையாத உபாத்தியாயரும், இளமையான ஆசிரியர்கள் ... மாணவர்க ... விடைகளைத் திருப்பிச் சொல்லும் வழக் ...

**ஒருவருக்கொருவர் கேள்வி கேட்டுக் கொள்ளுதல்.**

பாடம் முடியுந்தருணத்தில் மாணவர்கள் ஒருவருக்கொருவர் கேள்வி கேட்கும்படி அனுமதி யளிக்க வேண்டும். இம் முறையில் சில நற் பயன்களும் தீப் பயன்களும் இருக்கின்றன.

*நற்பயன்கள்:—*

(1) மாணவர்களின் விஷயங்களை நன்றாக விவரிக்கவல்லமை பெறுகின்றனர்.

(2) ஒருபாடத்திலுள்ள மிகவும் கஷ்டமான கேள்விகளையே கேட்பார்கள்.

(3) இப்மாதிரி பரஸ்பரமான கேள்விகள் வகுப்பில் போடப்பட்டு வருமாயின் ஒவ்வொரு மாணவனும் மிகக் கவனமாகப் பாடத்தைக் கவனிப்பான். அதிகக் கஷ்டமான விஷயங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு தான் மற்ற மாணவர்களைக் கேள்வி கேட்கும்போது அவ் விஷயங்களைப்பற்றி கேட்பான்.

(4) உபாத்தியாயர் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல லஜ்ஜையும் பயமு மடைவதைப்போலிராமல் தன்னைப்போன்ற மாணவர்களில்ஒருவனுடைய கேள்வியை மிகத் தைரியமாகவும், லஜ்ஜையின்றியும் பதில் கூறுவான்.

*தீப்பயன்கள்:—*

(1) கேள்வி கேட்பதற்குக் கொஞ்சம் அனுபவமும் வேண்டும். சிறுவர்கள் கேட்கும் கேள்விகள் வெகு சுலபமாகவும், தெளிவாக விராமலும் இருக்கின்றன.

(2) மாணவர்கள் விரைவில் கேள்விகளைப் போடமுடியாது. மற்ற மாணவர்களும் அக் கேள்விகளுக்கு விரைவில் பதில் அளிக்கவு முடியாது

இவைகளிருந்த போதிலும் 'பரஸ்பரக் கேள்வி' சரியாக நடை பெற்று வருமானல் மேல்வகுப்புகளில் அதிக பயனை அளிக்கத் தக்கது. அவர்களுக்கு அவ்விஷயம் தெரிந்ததாக நிச்சயிக்கலாம். ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் உபாத்தியாயர் ஒரு சங்கதியை கவனத்தில் வைக்கவேண்டும். ஒரு கேள்விக்கு உத்தரம் புத்திசாலியான சில பிள்ளைகள் தான் அளிக்க முடியும். மற்ற மந்த புத்தியுள்ளவர்கள் அக்கேள்விக்குப் பதில் சொல்லமுடியாதவர்களாக விருப்பார்கள். புத்திசாலியான சிறுவன் மறுமொழி கொடுத்தவுடனே வேறு விஷயத்திற்குத் தாவி விடாமல் மந்த புத்தியுள்ளவர்களைக் கொண்டு அந்த விடையைப் பன்முறை சொல்லும்படி உபாத்தியாயர் செய்யவேண்டியது அவசியம். ஒருவன் தவறானவிடை கொடுப்பானுயின், அவனைத்தாண்டி அடுத்த பையனைக் கேட்கப்போகாமல், முதலில் தவறிய பையனுக்கே கேள்விகள் ... வன் தப்பு இன்னதென்று அவனுக்குக்காண்பிக்கவேண்டும். உபாத்தி... ...கள் அளிக்கும்போது அ...

மாகக் கேட்க வேண்டும். சிறுவர்கள் பதில் சொல்லும்போதே சரி உனக்குத் தெரியும் அதுபோதும், என்று சிலர் சிறுவர்களைப் பதில் அளிப்பதனின்றும் தடுத்துவிடுகின்றார்கள். அது முழுவதிலும் பிசகு. கேள்விகளின் நோக்கம், பிள்ளைகள் அவ்விஷயத்தைப் பற்றி செவ்வனே அறிந்துள்ளார்களா என்பதும், அவைகளை நன்கு தவறுதலின்றி சொல்கிறார்களா என்பது மல்லவா ?

**மந்த புத்தி யுள்ள சிறுவர்களைச் சுறு சுறுப்பாக்கும் வழிகள்.**

உபாத்தியாயர் ஒருவகுப்பில் தாம் சொல்லிக்கொடுத்து வரும் போதனா முறையை மந்த புத்தி யுள்ள குழந்தைகளின் மூளையின் வலிமைக்குத் தகுந்தபடி அமைத்துக் கொள்ள வேண்டும். மந்த புத்தியுள்ளவர்கள் வகுப்பில் தூங்காதபடியும் அவர்கள் மனம் வேறிடம் நாடாம லிருக்கும்படியும் அவர், அவர்களை அடிக்கடி ஊக்கப்படுத்த வேண்டும். கருப்பலகையில் அவர்களை எழுதச் சொல்லவேண்டும். புத்திசாலியாயுள்ள குழந்தைகளின் பக்கத்தில் மந்தமான குழந்தைகளை உட்காரவைக்கவேண்டும். ஒரு வகுப்பு மிகவும் சோம்பலாயிருந்தால் உடனே தேகப்பயிற்சி செய்ய அழைத்துப்போகவேண்டும். அல்லது கெட்டிக்காரக் குழந்தைகளைப்பாடத்தைப் பார்த்துப் படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளை அது மாதிரியாகவே உரத்திப்படிக்கச் சொல்லவேண்டும். அவர்களைக் கேள்வி கேட்கும் போது உட்காரவைத்துக் கேட்பது நலம். மனக்கணக்கு கேட்கவேண்டும். அதன் சரியானவிடையை விரைவாய் ஒரு கரும்பலகையில் முதல் எழுதுகிற குழந்தைக்கு வெகுமதி கொடுத்து உத்ஸாகப் படுத்த வேண்டும். இப்படியாக பல முறையினால் மந்தமான குழந்தைகள் சுறுசுறுப்பாகி வந்திருக்கிறார்கள் இஃது ஓர் அனுபவம். குழந்தைகளை அன்பு என்கிற கயிற்றினால் கட்டி, அவர்களுக்குப் போதித்து வந்தால் உபாத்தியாயர்களின் சிரமம் வெகுதூரம் நீங்கும். குழந்தைகளும் சுறுசுறுப்புடன் படித்து வருவார்கள். பள்ளிக்கு வரும்போது குழந்தைகள் சந்தோஷமாக வந்து உபாத்தியாயரைக் காண்பார்கள். பள்ளியை விட்டுப்போகும் போதும் துரிதமாக வீட்டுக்குப்போக இடமுண்டாகும்.

மந்தபுத்தியுள்ள குழந்தைகள் மேற்கண்ட அனுபவமுறைகளினால் சுறுசுறுப்பை அடையாமலிருந் தாலாவது அல்லது மந்தத்தனத்தை அதிகமாக அடைந்தாலாவது, உபாத்தியாயர்கள் மௌனத்தி லிருக்கக்கூடாது. உடனே இவ்விஷயத்தை அக்குழந்தைகளின்பெற்றோர்களுக்குத்தெரியப்படுத்தி வைத்தியரைக்கொண்டு அவர்களின் மூளையை பரீக்ஷிக்கச் செய்யவேண்டும். தெரியாத பெற்றோர்களுக்கு பள்ளிக்கூடத்துத் தலைமையதிகாரி எடுத்துச் சொல்லவேண்டும். குழந்தையின் மூளைக்கோளாறுகளை நிபுண வைத்தியர்களால் அறியமுடியுமேயன்றி சாமானியர்களால் அறிய முடியாது. ஐரோப்பாவில் மிகவும் மந்தமான குழந்தைகள் வைத்தியர்களால் பரீக்ஷிக்கப்பட்டதற்குப்பிறகு, சுறுசுறுப்புள்ளவர்களாயும் நல்ல புத்திசாலிகளாகியுமிருக்கிறார்கள். ஒவ்வொரு பாடசாலைக்கு அருகாமையில் வைத்தியர்கள் இருப்பது அவசியம். சாதாரணமாக ஏல

... ருக்குப் ...

முடியாதாகையால், பள்ளிக்கூட அதிகாரிகள் நிபுண வைத்தியர்களை நியமித்துக் கொள்வது நலமாகும்

தற்காலத்தில் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் வருஷ ஆரம்பத்தில் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்கும்போது வைத்தியச்செலவு (Medical fees) என்பதையும் சேர்த்து வாங்குகின்றனர். அவ்விதம் வாங்கும் பணத்தை பள்ளிக் கூடத்திற்குச் சமீபத்திலுள்ள வைத்தியர் ஒருவருக்குக் கொடுத்து பிள்ளைகளுக்கு வைத்தியஞ் செய்ய நியமித்து வருகின்றார்கள். இம்முறை சரியாக நடந்து வருமாயின் சிறுவர்களுக்கும் பெற்றோர்களுக்கும், பள்ளிக்கூடத்திற்கும் பெரிய நன்மையுண்டாகும் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

**சிறுவர்களுக்குக் கற்பிக்கும் முறை**

சிறுவர்களுக்கு எத்தனையோ நூதன விஷயங்களைப் போதிக்கவேண்டியிருக்கும். அவைகளைச் சிறுவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூறும்சாதுர்யம் உபாத்தியாயரிடம் இருக்க வேண்டும். எங்கெங்கு இடங்களில் சிறுவர்கள் தெரிந்து கொள்ளக் கஷ்டப்படுகிறார்களோ அந்தந்த இடங்களில் உபமானங்களைக்கொண்டு உபாத்தியாயர் விளக்கிக் காட்டவேண்டும். அந்த உபமானங்களெல்லாம் சிறுவர்களது அனுபவத்திற்குள் அடங்கினவையாகவும் தெளிவாகவுமிருக்க வேண்டும். பாடத்தில் நிகழும் வஸ்துக்களை நேரில் கொண்டுவந்து காண்பித்தும், மிருகங்கள் முதலியவைகளின் உருவத்தைக் கரும்பலகையில் வரைந்தும் பிள்ளைகளுக்குப் பாடத்தில் உற்சாகம் உண்டாகும்படி உபாத்தியாயர் செய்யவேண்டியது. சிறுவர்களுக்குத் தெரிந்த விஷயங்களிலிருந்து தெரியாத விஷயங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

**நூதன விஷயங்களைக் கற்பித்தல்.**

ஒரு பொருள் கிடைக்காத பக்ஷத்தில் உபாத்தியாயர் அதைப் போல் கரும் பலகையில் வரையும் சக்தி பெற்றவராயிருக்க வேண்டும். சாதாரணமான வஸ்துக்கள், சாமான்கள், பக்ஷிகளின் அநேகவிதமான அலகுகள், மிருகங்களின் பாதங்கள், சிலபொருள்களின் உருவங்கள் இவைகளை விரைவாகவும், நன்றாகவும் வரையும் சக்தி யுடையவர்களாக ஒவ்வொரு உபாத்தியாயரும் இருத்தல் அவசியம். படத்தைக் கொண்டு போதிப்பதைக் காட்டிலும், அதைப்போல அப்பொழுதே கரும்பலகையில் விரைவில் வரைந்து போதிப்பது மிகவும் சிலாக்கியமானது. ஏனென்றால் வகுப்பின் முன்னிலையில் வரையப்படுவதால் பிள்ளைகள் சிரத்தையும் உற்சாகமும் கொள்கின்றார்கள்.

உபாத்தியாயர் விஷயங்களைச் சிறுகச் சிறுகச் சொல்லி அவைகளைத் தெரிந்து கொண்டார்களா வென்று கேள்விகள் மூலமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப்பிரகாரம் கற்பித்த பிறகு அவைகளை யெல்லாம் ஒரு தடவை திருப்பவேண்டும். பழைய பாடங்களில் பிள்ளைகள் அடிக்கடி பரீக்ஷிக்கப் படவேண்டும்.

சுருங்கக் கூறுமிடத்து சிறு பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறையில் [illegible] விஷயங்கள் சில[illegible]ம். (1) கேள்வி கேட்டல், (2) தெரியாத

விஷயங்களை உபமானத்தால் விளக்குதல். (3) பிள்ளைகள் தவறாக விடையளித்தால் அவைகளை அவர்களே திருத்தும்படிச் செய்தல். (4) பாடத்தின் மத்தியிலும் கடைசியிலும் சொன்ன அம்சங்களைத் திருப்புதல். (5) அடிக்கடி பரீக்ஷித்தல். இம் முறைகளைக் கொண்டு சிறுவர்களுக்கு எத்தகைய நூதன விஷயங்களையும் சிரமமின்றி போதிக்கலாகும்.

*சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கப் படும் முறைகள்.*

பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குப் பொருள் பாடங்கற்றுக் கொடுக்கப் படுவதனாலும், கரும் பலகையில் படங்கள் வரையப்படுவதனாலும் அவர்களின் இயற்கையிலுண்டான ஆக்கரையும் விஷயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அவாவும் தணிக்கப்படுகின்றன. உபாத்தியாயர் ஒவ்வொருவரும் தாம் கற்றுக் கொடுக்கப்போகும் விஷயத்தை ஏற்கனவே சிறுவர்களின் மனத்தில் குடிகொண்டிருக்கும் விஷயத்துடன் சம்பந்தப் படுத்தவேண்டும். இவ்விதம் நூதன விஷயத்தை முன் அடைந்துள்ள பழைய விஷய ஞானத்துடன் சேர்த்தால் தான் விரைவில் சிறுவர்கள் அந்தப்புதிய விஷயத்தைத் தெரிந்துகொண்டவர்களாவார்கள். இம் முறைகளை அனுஷ்டித்து வந்தால் பற்பல விஷயங்களைப் போதிக்கலாகும்.

நூதன விஷயங்கள் எல்லாம் எவ்விதமேனும் பழைய விஷய ஞானத்துடன் சம்பந்தப் படுத்தப்படவேண்டும் என்று கூறுவது மிக எளிது. அவ்விதம் அவைகளைச் சம்பந்தப் படுத்தும்போது வெகு சிரமம் உண்டாகின்றது. சமத்காரமும் சாமர்த்தியமுமுள்ள உபாத்தியாயர் இலகுவாக இதைச் செய்து களிப்படைகின்றார். தாம் சொல்லித்தரும் பாடத்தில் சிறுவர்கள் சிந்தை கொள்ள ஒரு உபாத்தியாயர் விரும்புவாரானால் அவர் நூதன அரிய சம்பவங்களைக் கூறி, அந்தப் புது விஷயத்தை பழைய ஞானத்துடன் கலக்கும்படிச் செய்யவும் வேண்டும். அத்தகைய சமத்காரமும் சொல் வன்மையும் ஒருவருக்கில்லையேல் அவர் நல்லாசிரியராக மாட்டார் சமத்காரம் வாய்ந்த உபாத்தியாயர் சிறுவர்களுக்குப் போதிக்கும் பாடத்தில்தமது அனுபவங்களையும் பெரியோரது பழமொழிகளையும், அவர்களுக்குத் தெரிந்த விஷயத்தின் பிரகாரம் சொல்லி அவர்களின் கவனத்தையும் சிரத்தையையும் தம் பக்கம் இழுத்துக் கொள்வார். உடனே சிறுவர்கள் அப் பாடத்தில் கண்ணுங் கருத்தும் கொண்டு கவனிப்பார்கள். இவ்விதம் சிறுவர்களுக்கு சிரத்தையுண்டாக்குவதற்கு நூதன விஷயத்தைப் போதிக்கத் தயார் செய்யும் முதல் நிலைமை யென்று சொல்லலாம்.

*மாணவர்கள் வாயினின்றும் வரவழைத்தலும் உபாத்தியாயர் சொல்[illegible]தும்.*

உபாத்தியாயர் பல கேள்விகளைக் கேட்டு மாணவர்கள் தாங்களே தங்களது அறிவைக்கொண்டு விஷயங்களை உரைக்கச்செய்வதனால் அவர்கள் நன்றாக அம் முறையில் பயிற்சி செய்யப் படுகின்றனர் ஆசிரியர்கள் மாணவர்கள் தெரிந்த விஷயத்தின் அனுபவத்தைக் கொண்டு தெரியாத விஷயங்களை [illegible]

வேண்டும். உபாத்தியாயர் சொல்வது, என்பது விஷயங்களைத் தான் படித்து மாணவர்களுக்கு உரைப்பது. மாணவர்கள் உபாத்தியாயர் கூறுவதை வேத வாக்செனக்கொண்டு மேல்கொண்டு அவைகளைக் குறித்து சிந்திக்காமல் இருந்து விடுவார்கள்.

பாடங்களை நன்றாகக் கற்பிப்பதில் இவ்விரண்டு முறைகளும் அடங்கியிருக்கும் மாணவர்கள் தாங்கற்ற விஷயங்களை உரைக்கச் செய்வதுதான் அதிகமாகச் செய்யவேண்டும். உபாத்தியாயர் சிற்சில விஷயங்களைத்தான் தாமே உரைக்கவேண்டும் சிற்சில ஆசிரியர்கள் தாம் ஒன்றுமே சொல்லித் தரக்கூடாதென்றும், பிள்ளைகளின் வாயினின்றுமே விஷயங்கள் வரவழைக்கப்படவேண்டுமென்றும் எண்ணி அதன்படி நடந்து வந்தார்கள். அதன்படி பாடம் போதிக்கப்படுமானல் மாணவர்கள் ஏதோ சில இலகுவான விஷயத்தைத் தெரிந்து மற்ற கடின விஷயங்களைத் தெரிந்து கொள்ளாது அந்தகாரத்திற் கிடக்கவேண்டுமென்பதும் வெள்ளிடைமலையே. சரித்திரபாடத்திலும், பூகோள பாடத்திலும், பொருட் பாடத்திலும் வாசக பாடத்திலும், அநேக விஷயங்கள் உபாத்தியாயரால் சொல்லிக்கொடுக்கப் படவேண்டும். இலக்கணவிதிகளையும், கணக்கு விதிகளையும் மாணவர்கள் மனப்பாடம் செய்த பின்னர்தான் உதாரணங்களைக் கொண்டு விளக்குகின்றார்கள். இவ்விஷயத்தில் அதிகமாக உரைக்கவேண்டியிருக்கிறது முதன் முதலில் உதாரணங்களைக் கூறியபின் விதிகளை மாணவர்கள் மனப்பாடம் செய்வார்களாளுல் அது நல்ல முறையாகும். தானகவே அனுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்ட விஷயம், பிறரால் தெரிந்து கொள்ளப்பட்ட விஷய்த்தைக் காட்டிலும் நீண்டகாலம் மனத்தில் மறவாதிருக்கும். பிரசங்க முறை ஒரு சிறிதும் சிறுவர்களைப் போதிக்கும் விஷயத்தில் பயன்படாது.

மாணவர்களின் வாயினின்று வரவழைப்பது என்பதற்கும் உபாத்தியார் உரைப்பது என்பதற்கும் சில முக்கிய வித்தியாசங்கள் உண்டு. அவை பின் வருவன:—

| வாயினின்றும் வரவழைத்தல் | சொல்லுதல் |
| --- | --- |
| 1. இது மிகவும்கஷ்டம். உபாத்தியாயர் சமத்காரம் வாய்ந்தவராயும்மாணவர்கள் காரண காரியங்களை யறிந்தவராகவு ருக்கவேண்டும். | இது அநேகமாக எளிது. உபாத்தியாயர் நன்றாகஉரைப்பவராகவும், மாணவர்கள் அவர் சொல்வதைச்கேட்பவராயுமிருக்க வேண்டும். |
| 2. இது தாமதமாக விருந்தாலும் நிச்சயமானது இதனல் தெரிந்துகொ[illegible] விஷயம் பல நாள் மற | விரைவானது. இதனல் தெரிந்து கொள்ளப்பட்ட விஷயம் சீக்கிரத்தில் மறந்து விடக்கூடும். |

| | |
|---|---|
| 3. குழந்தையின்மனோ நிலைமைக்குத் தகுந்தவிதம் அதற்கு தெரிந்த விஷயத்தைக் கொண்டு தெரியாத விஷயத்தைக் கற்பிக்கலாம். | உபாத்தியாயர் எது சுலபமென்றெண்ணுகிறாரோ அதன்படி குழந்தைக்குத் தெரிந்த விஷயத்தைப் போதிக்கலாம். |
| 4. தன்னுதவியையே உறுதியாய் நம்பும்படிச் செய்கிறது. | இதரர்களது உதவியை நாடும்படிச் செய்கிறது. |
| 5. இது அனுமானமுறை. கல்வி கற்ச்சிறந்தது. | இது சாதாரணமாக அறியக்கூடிய முறை. இதுபோதிக்கச் சிறந்தமுறை. |

உபாத்தியாயர்கள் யாவரும் இவ்விரு முறைகளை சமயத்திற்கேற்றபடி அனுஷ்டித்து மாணவர்களுக்குப் பாடங்கற்றுக் கொடுக்கவேண்டும்.

**வர்ணனை**

சுலபமான பாஷையில் வார்த்தைகளைக்கொண்டு சொல்லி ஒரு விதமான சித்திரத்தை மனத்தில் கொள்ளும்படிச் செய்தல். முன் கூறிய சொல்லுதல் என்பதில் இது சேரும். சிறுவர்கள் இந்திரியங்களினால் அறியக்கூடாத சில அரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள அவர்களது பழைய ஞானத்தைக் கொண்டு சில பொருள்களின் விஷயத்தைத் தெரிந்துகொள்ள உபாத்தியாயர் வர்ணனையை கையாளுகின்றார். இம் முறை தெரிந்ததினின்றும் தெரியாததை விளக்குகிறது. ஆனால் இந்த வர்ணனை சிறுவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் விஷயத்தில் அதிகமாகப் பயன்படாது.

## Notes of Lessons.

## பாடக் குறிப்பு.

ஒரு விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளாததன்முன் அதைப் போதிப்பது என்பது முடியாததாகும். அப்படிப் போதிப்பதனால் உபாத்தியாயரும், மாணவர்களும் சிறிதும் பயனடையார் என்பது திண்ணம்.

**பாடக்குறிப்பு என்பது என்ன-**

அதில் செலவிடும் காலம் வீணேயாகும். ஆகவே உபாத்தியாயர் தம்முடைய மனத்தில் தான் போதிக்கப்படும் பாடத்தைக்குறித்து முதன் முதலில் தீர்மானிக்கவேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டப் பாடத்தை வரையறுக்கவேண்டும். அப்பாடத்தைத் தாம் முழுவதும் தெரிந்திருந்தபோதிலும் உபாத்தியாயர் அதைப்போதிப்பதற்கு முன் தீரயோசிக்க வேண்டும். எவ்வளவு சிறிய பாடமாகவிருப்பினும் அதையும் முன்னமேயே யோசிக்கவேண்டும். ஆகவே ஒருபாடத்தின் முக்கிய அம்சங்களையும், சுருக்கத்தையும், அவைகளை எவ்விதமாக போதிப்பதில் உபயோகப்படும்படி செய்யவேண்டுமென்பதைக்குறித்து சுருக்கமாக எழுதவேண்டும். அப் [illegible] முறை [illegible]யிப்பிற்கு [illegible]

யாயர் தமது பாடத்தை எவ்விதமாகத்தயார் செய்து மாணவர்களுக்குப் போதிக்கின்றூர் என்பதை பிறர் அறிந்து கொள்ள விளக்கும் தன்மையுடையது.

தயார் செய்யக்கவனிக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்கள்.

1. வகுப்பு. விஷயத்தின் அளவும், இதைப்போதிக்கும் முறையும், பாடக்குறிப்புகளைத் மாணவர்களின் வயதையும் அறிவையும் பொறுத்தவை. சிறிய பிள்ளைகள் படிக்கும் பாலர் வகுப்பிற்குத் தகுந்தபாடம் பெரிய மாணவர்களுக்குச் சற்றும் உதவாது.

2. காலம். பாடத்தின் நீளம் எவ்வளவு கற்றுக்கொடுக்கமுடியும் என்பதை குறிக்கும். மாணவர்களின் வயது இவ்விஷயத்தில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும் பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு ஒரு பாடம் 15 அல்லது 20 நிமிஷ காலமே அதிகமானது. சிறிய வகுப்புகளுக்கு ஒரு பாடம் 30 நிமிஷங்கள் கொண்டிருக்கலாம். பெரிய வகுப்புகளுக்கு ஒரு பாடம் 45 நிமிஷங்கள் வரை சொல்லிக் கொடுக்கலாம் மனத்தைப்பொறுத்த பாடம் அதாவது மனக்கணக்கு எந்தவகுப்பிற்கும் பதினைந்து நிமிஷங்களுக்குமேல் கொடுக்கப்படக்கூடாது.

3. நோக்கம். ஒவ்வொருபாடமும் இயற்கையிலேயே ஒரு பொதுவான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றது. வாசகபாடம் சொல்லிக் கொடுப்பதன் கருத்து வாசகத்தைக் கற்றுக்கொடுப்பது தான். கணக்குப்பாடம் கற்றுக்கொடுப்பதன் நோக்கம் மாணவர்கள் மனோபயிற்சியையும், சரியாகச் சொல்லும் தன்மையையும், வர்த்தகத்தில் தேர்ச்சியடையச் செய்பவுமே. உபாத்தியாயர் ஒரு பாகத்தைக்குறித்துப் போதிக்க ஆரம்பிக்குமுன் அதன் கருத்தைத் தாம் முன்னரே தெரிந்திருக்கவேண்டும். அந்த நோக்கத்தை நேராக மாணவர்களுக்கும் தெரிவிக்கவேண்டியது அவசியம் அவ்விதம் அவர்நோக்கத்தை முன்பாகத் தெரிவிப்பதால் மாணவர்கள் அப்பாடத்தில் சிரத்தைகொள்ளத் தொடங்குவார்கள். அதனால் கொஞ்ச நாழிகையும் கூடி வருகின்றது.

உபாத்தியாயர் தனது அபிப்பிராயத்தை மிகவும் தெளிவாகக் கூறக்கூடாது. அவ்விதம் சொல்வதால் மாணவர்கள் மேன்மேலும தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவை இழக்கின்றூர்கள். ஆகவே அவரது வாய் மொழி, ஒரு பாடத்தின் முடிவுரைகளைச் 'சொல்லாமல் அதனது போக்கை மாத்திரம் சொல்லவேண்டும், உதாரணமாக நாம் இன்று அக்பர்சக்கரவர்த்தியின் குணநிசயங்களைக் குறித்து படிப்போமாக என்று உபாத்தியாயர், பாடத்தின் நோக்கத்தைக் கூறுவாரானுல் அவர் கொடுத்தவாய்மொழி மிகச்சரியானதாகும். மாணவர் யாவரும் அக்பர் சக்கரவர்த்தியின் குணங்களைக் கேட்க ஆவலுள்ளவர்களாகக் கவனிப்பார்கள். அப்படிக்கில்லாமல் ஆசிரியர் நான் அக்பர் மிகவும் நல்ல அரசர் என்றும் மிகவும் பட்சமாகவும் கருணையுடையயவராகவும் இருந்தார் என்று சொல்லப்போகிறேன்' என்று நோக்கத்தை முன்கூறு வாரானுல் மாணவர் மேன்மேலும் தெரிந்து கொள்ளவேண்டு மென்றெண்ணும் அவா தணிக்கப்

(அந்தநோக்கத்தை மாணவர்களுக்கு உரைப்பதெப்படி?)

(தொடரும்)

# சித்த குரு மகரத்வஜம்.

சென்னை சித்தகுரு ஔஷததசாலை இவர்களால் பச்சை, சங்ரோதயம், தங்கம், வெள்ளி, அப்ரகம், தாமிரம், தாளகம், லிங்கம், முத்து, பவழம் கொரோயா அயச்சத்து முதலிய செந்தூர பஸ்பங்களைக் கொண்டும், அபூர்வ சஞ்சீவி மூலிகைகளின் சத்துக்களைக்கொண்டும் சாஸ்திரோக்த மாய் தயாரிக்கப்பட்ட ஓர் ஔஷதம்.

இது இமயமலைச்சாரலில் இருந்து வந்த ஒருமகானால் உபதேசிக்கப் பட்டு பிரத்தியக்ஷானுபலமாய் பல ஆண்டுகளாக (மேல்நாட்டு வைத்திய மேதாவிகளாலும் சுதேச வைத்திய சிகாமணிகளாலும் தீராதெனக் கைவிடப்பட்ட) ஆயிரக்கணக்கான வியாதிஸ்தர்கள் அருந்தி குணமடைந் திருக்கிறார்கள் என்பது உலகறிந்த உண்மையே.

இதை காலதேச வர்த்தமானம் இல்லாமலும் பத்திய மில்லாமலும் ஆண் பெண் அடங்கலும் பாலர் முதல் விருத்தாப்யர் வரையில் யாதொரு வித்தியாசமன்னியில் சாப்பிட்டுவர எல்லாவித வெள்ளைகள் வெட்டைகள் மேகநீர் சம்பந்தமான சர்வவியாதிகளையும், எல்லாவித காசங்கள் விஷசுரங்கள், அஷ்டவித குன்மங்கள், எல்லாவித குஷ்டங்கள், படைகள், ஸ்திரீகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, சூதகவாயு, எல்லா விதமான வாய்வுகள், சித்தப்பிரமை, சோகை பாண்டு, மகோதரம் பீலி கை எல்லாபேதிகள் மற்றும் இளமைப்பருவத்தில் சேகரித்துக்கொண்ட மேகரோகக்கூடங்கள் துர்நடக்கையால் ஏற்படும் இந்திரியஸ்கலிதம், நரம் புத்தளர்ச்சி, பெண்மக்களுக்கு கர்ப்பமானது மூன்று அல்லது ஐந்து மாதத்தில் கருவழிந்துப்போவதையும் மலட்டுத்தன்மயையும், சந்தான விருத்தியற்றவர்களுக்கும் இம்மருந்தை சாப்பிட சூரியனைக்கண்ட பனி போல் நீக்கி தாது புஷ்டியையும் நல்ல தேஜஸையும், முகவசீகரத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுத்து ரக்ஷிக்கும் என்பதை நாங்கள் நிச்சயமாகக் கூறுவோம். வியாதியஸ்தர்களும் சாப்பிடலாம்.

**பூர்ண குணத்தை கொடுககக்கூடிய 30 மாத்திரை அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 8—0—0**

60 மாத்திரை புட்டி 1-க்கு ரூபாய் 15 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

# சித்த குரு வில்வாதி லேகியம்.

50 வேளை லேகியம் ரூபாய் 3. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இச்சிறந்த லேகியத்தை சாஸ்திரோக்தமாய்செய்துமுடித்திருப்பதால் இதை ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம். இச்சஞ்சீவியை உட்கொண்டு வருவதினால் மலசிக்கல், மூளை கொதிப்பு ஞாபகசக்தி குறைவு, நித்திரை யின்மை, அசக்தி, சோம்பல், பசியின்மை, மயக்கம், மார்புநோய், ரத்த க்ஷீணம், வயிற்றுநோய், இடுப்புவலி, கைகால் கடுக்கம், ஸ்திரீகளுக்கு சூதகசிக்கல் முதலியவைகளை போக்கி மலஜலத்தை சுகமாகப்பிரித்து, நற்பசியையும், தேகதிடத்தையும் நல்ல தேஜஸையும் கொடுக்கும் என்பது பிரத்தியக்ஷ அனுபவம். 3-வேளையில் குணம் தெரியும். பத்தியம் இல்லை.

எல்லா வியாதிகளுக்கும் மருந்து கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| தந்தி விலாசம் சித்தகுரு. | சரவணனந்த சித்தாஸ்ரமம், ...ாற் பெட்டி 1280, ஜார்ஜ் டவுன், ... |

## லோகாசிரியன்.

## IDEAL TEACHER.

உபாத்தியாயர்கட்கும், மாணவர்களுக்கும் உபயோகமான மாதப் பத்திரிகை.

| | | | |
|---|---|---|---|
| தனிக்காப்பி | .... | ரூ | 0 4 0 |
| வருட சந்தா | .... | ,, | 1 8 0 |
| பாலர் கதாமஞ்சரி 30 பக்கம் | .... | ,, | 2 0 0 |

N. வெங்கடராயலு & சன்.

96 தம்பு செட்டித்தெரு, சென்னை.

## விவேகானந்தம்.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்வதற்கான பல சித்திரப் படங்கள் அடங்கிய மாதப்பத்திரிகை. இதில் கல்வி, விவசாயம்; கைத்தொழில், சுகாதாரம், நாவல், ஜீவிய சரிதங்கள், ஸ்திரீகள், சிறுவர்கள் பக்கங்கள், வெளிவரும்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | .... | ரூ | 1 0 0 |
| வெளிநாடு | .... | ,, | 1 4 0 |

நேஷனல் பப்ளிஷிங்கம்பெனி,

ஜி. டி. மதறாஸ்.

## தெய்வபக்தன்.

ஒரு மாதாந்தர தமிழ் பத்திரிகை.

தமிழ் நாட்டில் தேவஸ்தானங்கள், தர்மஸ்தாபனங்களால் நம்மவர் அடையவேண்டிய நன்மைகள் அது சம்பந்தமானபல வியாசங்கள் வெளிவரும்.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா | .... | ரூ | 3 0 0 |

மானேஜர், தெய்வபக்தன்,

கும்பகோணம்.

## சுதந்தரன்.

பிரதி ஞாயிறுதோறும் பிரசுரமாகும் பத்திரிகை.

சென்ற ஏழு எட்டு வருஷகாலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயம் கைத்தொழில் வியாபாரம் முதலிய செல்வ விருத்திக்கான விஷயங்களுடனும் மனிதர்களுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம் முதலிய கட்டுரைகளைத் தாங்கிவந்த வர்த்தக மித்திரன் தற்காலப் போக்கை அனுசரித்து சுதந்திரன் என்னும் பெயருடன் இராஜீய விஷயங்கள், மகாத்மா காந்தி. அவர்களின் உபதேசம், இந்தியர் முன்னேற்றமார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளிவருகின்றது.

வருஷ சந்தா

| | | | |
|---|---|---|---|
| இந்தியாவிற்கு | .... | ரூ | 6 0 0 |

சுதந்திரன் ஆபீஸ், தஞ்சாவூர்.

## நாடார் குல மித்திரன்.

வாராப் பதிப்பு.

இது தென்னிந்தியாவில் உலவிவரும் முக்கியபத்திரிகைகளில் ஒன்று. இது வாரந்தோறும் அருப்புக்கோட்டை நாடார் கல்விச் சங்க சபையினின்று வெளிவரும். இது வியாபார விஷயங்கள் விவசாய நுட்பம்; கைத்தொழில் குறிப்பு; பிறதேச வர்த்தமானம் ராஜாங்க முறை முதலிய அரிய விஷயங்கள், வெளிவருவதோடு இந்திய க்ஷத்திரியகுல பாண்டிய நாடார்களின் அபிவிருத்தியையே பிரதானமாகக்கொண்டு வெளியிடப்படுகின்றது.

சந்தா விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | ... | ரூ | 3 8 0 |
| வெளிநாடு | .... | ,, | 4 0 0 |

பத்திராதிபர்,

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,

அருப்புக்கோட்டை.

...சுரு'வில் கண்டதாக எழுதவும்

நாவல் நண்பர்களுக்கோர் நல்விருந்து.

## திருவாளர்

## எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள்

இயற்றிய தேனினும் இனிய, மாவினும் மதுரமான நாவல்கள், நவீன கதைகள் ஒவ்வொருவரும் படிப்பது பரமாநந்தம்.

| | |
|---|---|
| **பத்மாட்சி:** ஓர் அரிய துப்பறியும் நாவல். ஆதிமுதல் அந்தம்வரையில் சுவாரஸ்யம் நிறைந்த அரிய நாவல். விலை ரூபா. 2—0—0 | வசந்தா ரூ. 2—0—0<br>வீர கேசரி ,, 1--12—0<br>அமரர் நதன் ,, 1—4—0<br>அமிர்த சாகரன் ,, 1—4—0<br>ஆனந்த மனோகரன் ,, 1—0—0<br>மதுராம்பாள் ,, 0--8—0 |

## இந்து மதத்தின் இரு தூண்கள்

| | |
|---|---|
| **ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்.**<br>பண்டித நடேச சாஸ்திரியாரால் மொழிபெயர்க்கப்பட்டது.<br>கனமான ஆண்டிக் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு அழகுற பயிண்டு செய்யப்பட்டது. 6 காண்டமும் சேர்ந்தது<br>விலை ரூபா. 12—8—0 | **ஸ்ரீ மாஹபாரத வசனம்.**<br>ஸ்ரீமன் எம். வி. ராமாநுஜ அய்யங்கார் அவர்கள் மொழிபெயர்த்தது.<br>ஆதி பர்வம் (கலிகோ பயிண்டு) ,, ரூ. 6 0 0<br>ஸபா பர்வம் ,, ,, 2 8 0<br>விராட பர்வம் ,, ,, 2 8 0<br>பீஷ்ம பர்வம் ,, ,, 3 8 0<br>துரோண பர்வம் ,, 5 0 0<br>கர்ண பர்வம் ,, ,, 3 0 0<br>சாந்தி பர்வம் ,, ,, 4 0 0<br>ஷை இரண்டாம் பாகம் ,, 4 8 0<br>அனுசாயசன பாவம் ,, 6 0 0 |

## ஸ்ரீ ரங்கா அண்டு கம்பெனி,

புஸ்தக வியாபாரிகள்,

94, பவழக்காரத் தெரு

## ரப்பர் ஸ்டாம்பு.



விலை ரூபா 3 0 0
இந்த ஸ்டாம்புகளுடன் செல்ப் இங்கி பாட்பிரஷ் ஒரு இங்கிபுட்டி, பெட்டியுடன் கொடுக்கப்படும்.

கையெழுத்து ஸ்டாம்பு 2 அங்குல நிகளம் சார்ஜ் ரூபா 2—8—0 3 அங்குல நிகளம் சார்ஜ் ரூபா 3—0—0 இன்ஷியல் ஸ்டாம்பு சாாஜ ரூபா 2—0—0.

அரக்கு சீல் பித்தளையில் கடைச்சல் பிடித்தது 2-அணு சைஸ் ரூபா 1—8—0. தகட்டு சீல் ரூபா. 0—12—0. 4-அணு சைஸ் கடைச்சல் பிடித்தது சார்ஜ் ரூபா 2-0-0 தகட்டு சீல் சார்ஜ் ரூபா 1—0—0 இவைகள் சாவிவளையத்தில் வேண்டுமானாலும் பிடி போட்ட சீல் வேண்டுமானாலும் செய்து தரப்படும். வேஷ்டிக்கு மார்க்கு ரப்பர் ஸ்டாம்பு (P. V. C.) என்பதுபோல் இன்ஷியல் ஸ்டாம்பும் மார்க்கு இங்கிபுட்டியுடன் கொடுப்பதற்கு சார்ஜ் ரூபா 1-4-0. தபால் சாாஜ் பிரத்தியேகம். ரப்பர் ஸ்டாம்பு கேட்லாக் வேண்டுபவர்கள் அரையணு ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

**ஸ்ரீ ரங்கா அண்ட் கம்பெனி,**

ஸ்டேஷனரெஸ் என்கிரேவர்ஸ், ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்கள்,

94, பவழக்காரத் தெரு, சென்னை.

---

# SRI MURUGA'S DISPENSARY

215, Mint Street, MADRAS.

**N. R. V. I. KALNAR TOOTH POWDER.**

கல்நார் பற்போடி.

ஒரு சிட்டிக்கையில் பல் துலக்கிவர, பல்வலி, பல்லரணை, பல் சந்தில் இரத்தம் வருதல், ஏகர் கொழுப்பு, பல்லசைவு, வாய் நாற்றம் முதலியவைகளைக் கண்டிக்கும்.

ஒரு சிட்டிகை பொடியை மாத்திரமே எடுத்து பல் துலக்கவும். வாயை கொப்புளிக்காமல் கண்ணுடித் துண்டை பல்லில் கொடுத்து கரகரவென்று கடித்தபோதிலும் ரத்தம் வராது சோதனை பார்த்துக்கொள்ளலாம். டப்பி 1-க்கு அணு 4.

## ஸ்ரீ முருகாஞ்சனம்.

இந்த அஞ்சனம் அருமையாகிய மருந்தாகையால், ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. இதனால் தலைவலி, பாறம், ஒற்றை தலைநோய், கழுத்து இழுப்பு, பல்நோய், சுளுக்கு, கீல்பிடிப்பு வலி, ஜன்னி, குழந்தைகளுக்கு காணும் மாந்தம் வலி, முதலியவைகளுக்கும் ஜலதோஷம், நெஞ்சில் கபம் முதலியவைகளுக்குமேல் உபயோகிக்க 5-நிமிஷத்தில் குணப்படுத்தும் என்பது சந்தேகமில்லை.

1-டப்பி 1-க்கு விலை ரூ. 0 8 0. 1-டஜன் ஷை ,, 5 0 0.

வி. பி. சார்ஜு பிரத்தியேகம்,

**ஸ்ரீ முருகர் டிஸ்பென்ஸரி,**

**215, தங்கசாலை தெருவு, மதருஸ்.**


---

...கரு'வில்' கண்டதாக எழுதவும்.